பக்கங்கள்:- பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# வலம்புரி

# The Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆனி 19 | வியாழக்கிழமை (03.07.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 196

## பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உயர்பாதுகாப்பு வலயம் கொண்டுவரப்படும்

### யாழ். இராணுவத் தளபதி சரத்பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ். குடாநாட்டிலுள்ள உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களை பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்போவதாக யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக கொழும்பில் இடம்பெற்ற மாநாட்டில் மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்த ஆட்சேபனைகளுக்குப் பதிலளிக்கையிலேயே இராணுவத் தளபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

உள்ளூரில் இடம்பெயர்ந்து வாழும் மக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக விரிவான அறிக்கையொன்றை இராணுவத் தளபதி மனித உரிமை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி உயர் பாதுகாப்பு வலயமாநாட்டில் வேண்டுகோள் விடுத்தார்.

அதற்குப் பதிலளித்த சரத் பொன்சேகா மேலும் பேசுகையில்:

உயர் பாதுகாப்பு வலய பிரதேசத்தில் படையினரின் பாதுகாப்பை மாத்திரமே நாம் கவனத்தில் கொண்டுள்ளோம்.

உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களை தற்போதைய நிலையில் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மீளக்குடியமர்த்துவது தொடர்பாக சிந்திக்கும் நிலையில் நாம் இல்லை

(10ம் பக்கம் பார்க்க)

## மூவருக்கு மரணதண்டனை

(அம்பாறை)

1991 ஆம் ஆண்டு அக்கரைப்பற்றில் இடம் பெற்ற கொலை வழக்கு ஒன்றில் குற்றம் சாட்டப்பட்ட மூவருக்கு அம்பாறை மாவட்ட மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

இந்த வழக்கின் தீர்ப்பு அறிவிக்கப்பட்ட போது இரண்டாம் பிரதிவாதி நீதிமன்றில் ஆஜராகியிருக்கவில்லை.

அட்டாளைச் சேனையைச் சேர்ந்த முகமட் கனீபா என்ற நபர் கொலை செய்யப்பட்ட வழக்கிலேயே நீதிபதி ஏ.டி.ஆர்.எம். பெரேரா இந்தத் தீர்ப்பை வழங்கினார். (த)

### இடைக்கால சபை திட்டவரைபுடன்

# நோர்வேத் தூதுவர் வெஸ்பேர்க்

# விரைவில் வன்னி செல்வார்

### முன்னதாக பிரதமருடன் சந்திப்பு

(நமது நிருபர்)

**வடக்குக் கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான அரசாங்கத்தின் உத்தேசத் திட்டவரைபுடன் இலங்கைக்கான முன்னாள் நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் அடுத்த வாரம் வன்னிக்கு விஜயம் செய்வார் என கொழும்புத் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.**

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளை சீர்ப்படுத்தும் நோக்கில் இலங்கை வந்திருக்கும் முன்னாள் நோர்வேத் தூதுவர் ஜோன்வெஸ்பேர்க் அரசாங்கத் தரப்போடு பேச்சுவார்த்தை நடாத்திவருகிறார்.

இடைக்கால நிர்வாக சபைத் திட்டவரைபு மற்றும் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பான விடயங்கள் குறித்து அரசாங்க உயர்மட்டத் தலைவர்களோடு தூதுவர் வெஸ்பேர்க் ஆராய்ந்து வருகிறார்.

நாளை மறுதினம் பிரதமர் ரணில்

(10ம் பக்கம் பார்க்க)

## கொழும்பின் பாதுகாப்பிற்கு பொலிஸ் ரோந்து நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்பு நகரின் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்தும் நோக்கில் ரோந்து நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கு பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

இதற்கமைய இரவும் பகலும் நடமாடும் மற்றும் சைக்கிள் ரோந்துக் குழுக்கள் பாதுகாப்பு ரோந்துப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

வீடுகளில் இடம் பெறும் கொள்ளைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தல், களவுகள் மற்றும் பாதாள உலகக் கும்பல்களின் நடவடிக்கைகள் ஆகியவற்றைக் கண்காணிக்கும் நோக்குடனேயே மற்றும் ஒரு திட்டமாக இது அமுல்படுத்தப்படுகிறதென சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் சந்திர பெனாண்டோ தெரிவித்தார்.

சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பொலிஸாருக்கு விசேட மேலங்கிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் கைத்துப்பாக்கிகளும் வழங்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக பம்பலப்பிட்டி, கிரிலப்பனை, நாரகேன்பிட்டி பொலிஸ் பிரிவுகளில் இத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் வெற்றியைப் பொறுத்து கொழும்பு மாவட்டத்தில் உள்ள 19 பொலிஸ் பிரிவுகளுக்கு இத்திட்டம் விஸ்தரிக்கப்படும்.

இதேவேளை கிரிலப்பனையில் இத்திட்டம் உத்தியோக பூர்வமாக நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டு

(10ம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி - இனந்தெரியாத குழு வவுனியாவில் நேற்று மோதல்

### துண்டுப் பிரசுரங்களும் எரிக்கப்பட்டன

(வவுனியா)

வவுனியாவில் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்துக் கொண்டிருந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுக்கும் இனந்தெரியாத இளைஞர்களுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற வாக்குவாதம் மற்றும் கைகலப்பினால் அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

நேற்று முற்பகல் 10 மணியளவில் வவுனியா பஸ்நிலையப் பகுதியில் ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துக் கொண்டிருந்த போது அப்பகுதிக்கு வந்த இளைஞர்கள் துண்டுப்பிரசுரங்களைப் பறித்தெடுத்து தீயிட்டுக் கொழுத்தினர்.

இதனால் இரு தரப்பினருக்கும் இடையில் வாக்குவாதம் முற்றிய நிலையில் கைகலப்பு ஏற்பட்டது.

இதன்போது இரு ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் கடுமையாகத் தாக்கப்பட்ட

(10ம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாக சபை வழங்கப்பட வேண்டும்

### அஸ்கிரிய பீடாதிபதி வேண்டுகோள்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு ஏற்பட வடக்குக் கிழக்குக்கு இடைக்கால நிர்வாகசபை வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு அஸ்கிரிய பீடாதிபதி வணக்கத்துக்குரிய மகாகடவல புண்ணிய சாரதேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள தனியார் தொலைக் காட்சியொன்றுக்கு அளித்த பேட்டியொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அப்பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது:

தமிழ் மக்களினதும் அரசாங்கத்தினதும் கருத்துக்களை கேட்டறிந்து

(10ம் பக்கம் பார்க்க)

## கனேடியத் தூதுவர் தமிழ்ச்செல்வனை இன்று சந்திப்பார்

(கிளிநொச்சி)

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் வலரிரேமன் அம்மையார் இன்று கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாகவும் சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகள் தொடர்பாகவும் இச்சந்திப்பில் ஆராயப்படவுள்ளது. (த)



பிந்துனுவெவ படுகொலை வழக்கில் மரணதண்டனை பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கதறி அழும் காட்சி

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

### இடைக்கால நிர்வாக சபையில்

# முஸ்லிம்களின் பங்கு குறித்த நகல் யோசனை இன்று பிரதமரிடம் கையளிப்பு

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக சபையில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் உட்பட பல்வேறு விடயங்களை உட்படுத்திய யோசனைகளின் எழுத்து மூல நகல் இன்று வியாழக்கிழமை பிரதமர் ரணில்விக்கிரம சிங்காவிடம் கையளிக்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையிலான குழுமேற்கொண்டு வருகிறது.

கடந்த ஞாயிறன்று முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் குழுவொன்று பிரதமரைச் சந்தித்து இதுதொடர்பாக கலந்துரையாடியதும், அப்போது இடைக்கால நிர்வாக சபை தொடர்பான யோசனைகளில் முஸ்லிம்களின் பங்கு பணிகள் குறித்து விரிவாக விளக்கமளித்ததும் தெரிந்ததே.

இதேவேளை, இந்தயோசனைகள் தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் சட்டமா அதிபர் கமலசபேசன், பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவர் சட்டத்தரணி பாயிஸ் 'முஸ்தபா ஆகியோருடனும் கலந்தாலோசனை செய்திருபபதாகக் கூறப்படுகிறது. (உ)

# ஆட்பதிவுத் திணைக்களத்தின் நடமாடும் சேவை 4 தினங்கள்

(சுண்டுக்குளி)

ஆட்பதிவுத் திணைக்களத்தின் நடமாடும் சேவைகள் யாழ்மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் நடைபெறவுள்ளன.

இதன்பொருட்டு ஆட்பதிவுத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் பன்னிருவர் எதிர்வரும் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்வரவுள்ளனர். எதிர்வரும் 14ம் திகதி கோப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச செயலகங்களிலும் 15ம் திகதி சாவகச்சேரி மருதங்கேணி பிரதேச செயலகங்களிலும் 16ம் திகதி உடுவில், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை பிரதேச செயலகங்களிலும் 17ம் திகதி வேலணை , ஊர்காற்றுறை, காரைநகர பிரதேச செயலகங்களிலும் 18ம் திகதி நெடுந்தீவு,நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலகங்களிலும் இந்த நடமாடும் சேவை இடம்பெறஉள்ளது.

தேசிய அடையாள அட்டை தொலைந்தவர்கள், புதிதாக விண்ணப்பிப்போர் ஆகியோர் உரிய பிரதேச செயலகங்களிற்கு மேற்குறிப்பிட்ட தினங்களில் சமுகமளித்து நன்மை அடயலாம் என ஆட்பதிவுத் திணைக்களம் கேட்டுள்ளது. (உ-110)

## தேசிய விளையாட்டாக தாச்சி?

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில் இடம்பெறவுள்ள சமாதான விளையாட்டுப் போட்டி மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டி என்பவற்றில் பாரம்பரிய விளையாட்டான தாச்சி விளையாட்டையும் இடம்பெறச்செய்ய வேண்டும் என யாழ்மாவட்ட தாச்சிச் சங்கத்தினர் விளையாட்டுத்துறை அமைச்சிடம் கோரிக்கை விட்டுள்ளனர். (உ-10)

# விளையாட்டுச் செய்திகள்

### கிரிக்கெட் வீரர்கள் தரப்படுத்தல்

## மேற்கிந்திய அணித்தலைவர் லாரா துடுப்பாட்டத்தில் முன்னணியி லுள்ளாராம்

(யாழ்ப்பாணம்)

டெஸ்ற் கிரிக்கெற் வீரர்களுக்கான தரப்படுத்தலினை ''பிறைஸ் வோட்டர் கவுஸ்கூப்பஸ்'' அண்மையில் வெளியிட்டுள்ளது.

இதன் பிரகாரம் துடுப்பாட்டத்தில் மேற்கிந்திய அணித்தலைவர் ''பிறைன் லாரா'' முதலிடத்தில் இருக்கின்ற அதேவேளை பந்து வீச்சாளர் வரிசையில் தென்னாபிரிக்காவின் முன்னாள் தலைவர் ''சோன் பொலக்'' முதலிடத்தில் உள்ளனர்.

அவுஸ்திரேலியா, இலங்கை ஆகிய அணிகளுடன் கடைசியாக நடைபெற்ற 6வதுடெஸ்ற் போட்டிகளிலும் லாரா 832ஓட்டங்களைப் பெற்றுள்ளார். முதலிடத்தில் உள்ள லாரா 887புள்ளிகளைப் பெற்றுள்ள அதேவேளை, அவுஸ்திரேலிய வீரர் ''மத்தியூகேடன்'' 859புள்ளிகளுடன் 2ம்இடத்தில் உள்ளார். ''ரிக்கிபொண்டிங்'' ''சச்சின்டெண்டுல்கார்' ''மைக்கல் வோன்'' ஆகியோர் முறையே மூன்று, நான்கு, ஐந்தாம் இடங்களில் உள்ளனர்.

பந்துவீச்சில்''பொலக்''873புள்ளிகளுடன் முதலிடத்திலும், இலங்கையின் நடசத்திர சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனும் அவுஸ்திரேலியவீரர் ''கிளைன் மக்ராத்தும்'' 861புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்திலும் உள்ளனர். ''கப்ஜன்சிங்', ''கெசன் க்னைப்சி'' ஆகியோர் நான்கு, ஐந்தாம இடங்களில் உள்ளனர்.(உ-68)

## றகர் போட்டிகளுக்கு தயார் நிலையில் ஆஸி.

உலகக்கிண்ண றகர் போட்டிகளுக்கு இன்றும்100 நாட்களே உள்ள இவ்வேளையில் இதற்குரிய தயார் நிலையில் இருப்பதாக அவுஸ்திரேலிய றகர்பேரவையின் நிர்வாகப் பணிப்பாளர் ''ஜோண்ஸ் பொனிஸ்'' தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10ம் திகதி ஆரம்பமாகவுள்ள இப்போட்டிகளில் 20நாடுகளைச் சேர்ந்த அணிகள் பங்குபற்றவுள்ளன.

48போட்டிகளைக்கொண்டஇவ் உலகக்கிண்ண றகர் போட்டியின் ஆரம்பப்போட்டியில் நடப்பு உலகக் கிண்ண சம்பியனை அவுஸ்திரேலியாவை எதிர்த்து ஆஜெண்டீனா விளையாடவுள்ளது.

இப்போட்டி சிட்டிஒலிம்பிக் விளையாட்டரங்கில் இடம்பெறும் என்றும் இறுதிப்போட்டிகளும் நவம்பர் மாதம் 22ம்திகதி இதே மைதானத்தில் நடாத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-68)

## விம்பில்டன் அரை இறுதியில் ஆட வில்லியம்ஸ் சகோதரிகள் தகுதி

லண்டனில் நடைபெற்று வரும் விமபில்டன் டெனிஸ் மகளிர் பிரிவு ஒற்றையர் அரைஇறுதியில் விளையாட அமெரிக்காவின் வில்லியம்ஸ் சகோதரிகள் தகுதிபெற்றுள்ளனர்.

''வீனஸ்வில்லியம்ஸ்'' மற்றும் ''செரீனா வில்லியம்ஸ்'' ஆகியோரை அரையிறுதிப் போட்டியில் சந்திக்க பெல்ஜியம் வீராங்கனைகளான பிரெஞ்சு பகிரங்க நடப்புச்சம்பியன் ''யுற்றின் கனேசாடினும்'' அவரது நாட்டைச் சேர்ந்த ''கிம்கிரிக்சும்'' தகுதி பெற்றுள்ளனர்.

எனினும், மகளிர் இரட்டையர் பிரிவில் மூன்றாவது சுற்றில் வில்லியம்ஸ் சகோதரிகள் தோல்வி கண்டுள்ளனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்திய வீரர்''லியண்டர் பேஸ்'' செக் குடியரசின் வீரர்''டேவிட் றிக்டில்'' ஜோடி அரையிறுதியில் விளையாடத்தகுதி பெற்றுள்ளனர்.

ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இரண்டாம் நிலை தரவரிசையில் உள்ள ''அத்திரே அகாசி'' அவுஸ்திரேலியவீரர்'' மார்க் கிளிப்போஸ்'' சிடம் 6/3,2/6,6/7,6/3,6/4 என்ற செற் கணக்கில் நான்காம் சுற்றுப் போட்டியிலேயே அதிர்ச்சித்தோல்வி அடைந்து வெளியேறியுள்ளார். (உ-68)

## துரையப்பா விளையாட்டரங்கம் துரித கதியில் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டின் ஓகஸ்ட் மாத ஆரம்பப்பகுதியில் இடம் பெறவிருக்கும் 29வது தேசிய விளையாட்டு விழாவினை முன்னிட்டு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கு துரித கதியில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

விளையாட்டு அமைச்சின் அதிகாரிகள் இதனை உறுதிப்படுத்தியுள்ளனர்.


விளையாட்டுத்துறை அமைச்சு இவ் விளையாட்டரங்கின் புனரமைப்பு பணிகளைமேற்கொள்ளவென 17 மில்லியன் ரூபாவினை ஒதுக்கியுள்ளது தெரிந்ததே.

இப்பணியில் யாழ்.கட்டடத் திணைக்களம், யாழ்.மாநகர சபை மற்றும் சீமெந்து கூட்டுத்தாபனம் என்பன ஈடுபட்டுவருகின்றன.

தற்சமயம் மைதானம் மட்டப்படுதப்பட்டு புற்கள் நடும் பணியும், மைதானத்தைச் சுற்றிவர வேலி அமைக்கும் பணியுடன், மைதானத்தின் மேற்கு பக்கமாக பாாவையாளர் அரங்கமைக்கும் பணியும் இடம்பெற்று வருகின்றது. (உ-68)



கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரியில் நடைபெற்ற இந்து சமய எழுச்சி விழாவை அதிபர் ஆர்.சிவசிதம்பரம் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், கல்லூரியின் இந்து மாமன்ற செயலாளர் எஸ். வாகீசன் அவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: பரு.நிரூபர்)





மாகாணமட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் 15ஆவது கீழ்பிரிவில் சம்பியன் கிண்ணத்தைப் வென்ற உடுவில் மகளிர் கல்லூரி அணியின் தலைவி வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக் கொள்வதையும், உடுவில் மகளிர் கல்லூரியின் அணியினரையும், அதிபர், ஆசிரியர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: எஸ்.கவிதரன்)


## யாழ்ப்பாணம் மாநகரசபை

## பண்ணை மீன்சந்தையை குத்தகைக்கு வழங்குவதற்கான

# மீன் கேள்வி அறிவித்தல் - 2003

யாழ். பண்ணையில் அமைந்துள்ள மீன் சந்தையை 21.07.2003 ஆம் திகதி முதல் 31.12.2003ம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீன் கேள்விகள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கேள்விப் பத்திரக் கட்டணம் | - ரூபா 300.00 | (வற் உட்பட) |
| கேள்விப் பிணைப்பணம் | - ரூபா 5000.00 | (மீளளிக்கக்கூடியது) |
| ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை | - ரூபா 898676.00 | (வற் நீங்கலாக) |
| கேள்விப் படிவம் வழங்கும் இறுதித் திகதி | - 15.07.2003 | (பி.ப. 3.00 மணி வரை) |
| கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி | - 16.07.2003 | (பி.ப. 1.00 மணிவரை) |
| கேள்விகள் திறக்கும் திகதி | - 16.07.2003 | (பி.ப. 2.30 மணி) |

கேள்வியில் சித்தி பெறுபவர் முழுத் தொகையையும் செலுத்தி உடன்படிக்கை செய்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை யாழ். மாநகர சபையில் அறிந்து கொள்ளலாம்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(C/6375)

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்.

# அமைதிக்காக அர்ப்பணிப்புடன் உழைக்க இஸ்ரேல் — பலஸ்தீன பிரதமர்கள் உறுதி

## ஜெருசலேம் சந்திப்பின் பின்னர் கூட்டறிக்கை

**மத்திய கிழக்கில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படப் போவதாக இஸ்ரேல் பலஸ்தீனப் பிரதமர்கள் கூட்டாக தெரிவித்துள்ளனர்.**

ஜெருசலேமில் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் அங்கிருந்து தொலைக்காட்சி மூலம் தங்களது நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரைகளிலே ஏரியல் ஷெரோனும், மொகமட் அப்பாசும் இதனைத் தெரிவித்துள்ளனர்.

இரண்டு நாட்டு மக்களுக்கும் சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு புதிய வாய்ப்பு உருவாகியுள்ளதாக மொகமட் அப்பாசின் அருகில் இருந்தவாறு ஏரியல் ஷெரோன் கூறினார்.

1967ம் ஆண்டு போரின் போது இஸ்ரேலியர்களால் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் உள்ள பலஸ்தீனர்களை ஆட்சி புரியவோ அவர்களது எதிர்காலத்தை நிர்ணயிக்கவோ இஸ்ரேல் விரும்பவில்லை என்றும் ஏரியல் ஷெரோன் கூறியுள்ளார்.

எனினும் பலஸ்தீனர்களின் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்ந்தால் நிரந்தர சமாதானம் ஏற்படுவது சாத்தியமல்ல என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, மோதல்களை முடிவிற்குக் கொண்டுவரவேண்டும் என்பதே பலஸ்தீனர்களின் எதிர்பார்ப்பு என்று பிரதமர் அப்பாஸ் கூறினார்.

**ஏரியல் ஷெரோனும், மொகமட் அப்பாசும் கூட்டாக நடத்திய செய்தியாளர் மாநாட்டின் போது இரண்டு நாடுகளினதும் அமைச்சர்கள் ஒன்றாக அமர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.**

இரண்டு நாட்டுத் தலைவர்களும் மீண்டும் விரைவில் சந்திப்பார்கள் என்று பலஸ்தீனத் தகவல் அமைச்சர் தெரிவித்துள்ளார்.(பி-9)

## ரயில் புரண்டதால் ஆந்திராவில் 19 பேர் பலி

(புதுடில்லி)

ஆந்திரப் பிரதேசத்தில் பாரங்கல் நகரத்தில் ஹைதிராபாத் சென்றுகொண்டிருந்த கோல்கண்டா கடுகதி ரயில் வண்டியில் இரண்டு பெட்டிகள் தடம் புரண்டு விழுந்ததில் 19 பேர் உயிரிழந்துவிட்டார்கள்.

பாரங்கல் ரயில் நிலையத்தில் இந்த ரயில் நிறுத்தப்படவேண்டிய நேரம் வந்தபோது பிறேக் இயங்காத காரணத்தினால் 2 ரயில் பெட்டிகள் தடம் புரண்டு விழுந்துவிட்டதாக ரயில்வே துறை இணை அமைச்சர் நிருபர்களிடம் பேசுகையில் தெரிவித்தார். (பி-9)

## இந்தியாவுக்குள் ஊடுருவ முயன்ற 89 பேர் கைதாகினர்

(புதுடில்லி)

இந்தியாவிற்குள் ஊடுருவ முயன்ற பெண்கள் குழந்தைகள் உட்பட பங்களாதேஷைச் சேர்ந்த 89 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திலுள்ள சர்வதேச எல்லையூடாக நேற்று முன்தினம் அதிகாலையில் இவர்கள் ஊடுருவ முயன்றதாக இந்தியப் படையினர் தெரிவித்திருக்கின்றனர்.

இதே எல்லைப் பகுதியில் நேற்று முன்தினம் ஊடுருவ முயன்ற பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த ஒருவரும் இந்தியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சர்வதேச எல்லைப் பகுதியில் பல்லாயிரக்கணக்கான படையினர் குவிக்கப்பட்டு எல்லைப் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இந்தியப் படையதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர். (பி-9)

## சதாமை பிணமாக அல்லது உயிருடன் அமெரிக்கப் படையினர் பிடித்தே தீருவர்

### ஈராக்கிலுள்ள யு.எஸ்.நிர்வாகி உறுதி

(பக்தாத்)

'சதாம் இன்னமும் உயிருடன் தான் இருக்கிறார் என்று நம்புகின்றோம். அவரை உயிருடனோ பிணமாகவோ பிடித்தே தீருவோம்' என்று ஈராக்கில் அமெரிக்க நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருக்கும் போல் பிரமர் கூறினார்.

சதாமைக் கண்டுபிடிப்பது ஏன் கஷ்டமாக இருக்கிறது என்று கேட்டபோது ''ஈராக் ஒரு பெரிய இடம். 30 ஆண்டுகளாக அவர் அங்கு தனக்கு பாதுகாப்பான வீடுகளையும், மாளிகைகளையும், சுரங்கங்களையும் கட்டிவைத்திருக்கின்றார். இன்னும் என்னென்னவோ யாருக்குத் தெரியும்...'' என்றார் பிரமர்.

ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி சதாம் பதவியில் இருந்து கவிழ்க்கப்பட்டதாக அமெரிக்கா அறிவித்தது. ஈராக் யுத்தத்தின்போது இரகசியத் தகவல்களையடுத்து சதாம் தங்கியிருந்த இடங்கள் மீது குண்டுத் தாக்குதல்களை நடத்தி அவரைக் கொன்றுவிட முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால், அந்த முயற்சிகள் வெற்றியில் முடிந்தனவோ என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

பக்தாத்தில் சதாமுக்கு அதிக ஆதரவு இருந்த பகுதிகளில் பெரும் தாக்குதல் ஒன்றை அண்மையில் அமெரிக்கப் படைகள் நடத்தினவென்றாலும் அவர் இருக்கும் இடம் தாக்குதலுக்குள்ளானதா என்பது தெரியவில்லை.

சதாமுக்கு ஆதரவாகவுள்ளவர்கள் கொல்லப்படும் வரை அல்லது பிடிக்கப்படும்வரை அமெரிக்கப் படைகள் மீதான தாக்குதல் நீடிக்கவே செய்யும் என்று பிரமர் கூறினார்.

அதேசமயம் சமீபகாலத்தில் அமெரிக்கப் படைகள் மீது சதாமுக்கு ஆதரவானவர்கள் நடத்திவரும் தாக்குதல்கள் அமெரிக்கப் படைகள் பெற்றுள்ள வெற்றியை பாதிக்கவில்லையென்று அமெரிக்கப் படைகளின் தளபதி டொமிபிராங்க் கூறியுள்ளார். (பி)

## சீனாவில் வெள்ளம்; 148 பேர் பலி

## ரூபா 3 ஆயிரம் கோடிக்கு மேல் இழப்பு

(பெய்ஜிங்)

சீனாவில் கடந்த சில நாட்களாக பெய்துவரும் பெரும்மழை மற்றும் வெள்ளத்தில் சிக்கி 148 பேர் உயிரிழந்தனர். வெள்ளத்தால் ரூ. 3ஆயிரத்து 375 கோடி அளவிற்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என்று சீன அதிகாரிகள் கூறினர்.

தெற்கு சீனாவின் - ஸேஜியாங், ஜியாங்ஸி, ஹுபெயி, ஹுனான், குவாங்ஸி, சாங்கிங், சிசுவான், குயிஸௌ ஆகிய மாநிலங்களும் தன்னாட்சிப் பிரதேசங்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. 4 கோடிக்கு மேற்பட்ட மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். 48 லட்சம் ஏக்கரில் பயிர்கள் சேதமடைந்துள்ளன என்று சீன அதிகாரிகள் கூறினர். (பி)

## முஷாரப்பை அகற்றுவதற்கு எதிர்க்கட்சிகள் முனைப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பை அகற்றுவதற்கான வழிவகைகள் குறித்து ஆய்வு செய்வதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை எதிர்வரும் 6 ஆம் திகதி நடத்த அந்நாட்டின் எதிர்க்கட்சிகள் முடிவெடுத்துள்ளன. இராணுவத் தலைமைப் பொறுப்பில் இருந்து முஷாரப் விலக வேண்டும். அவர் கொண்டுவந்த அரசியல் சாசன திருத்தங்கள் அனைத்தையும் ரத்துச் செய்யவேண்டும் என இஸ்லாமிய முத்தாகிதா மஜ்லிஸ் அமல் என்ற கட்சி கோரியுள்ளது.

இக்கட்சிதான் அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது. லாகூரில் வரும் 6ஆம் திகதி சர்வகட்சி கூட்டம் நடைபெறும் என்று அறிவித்துள்ளது. பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சி (பி.பி.பி) மற்றொரு முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் தலைமையிலான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் உள்ளிட்ட பெரிய கட்சிகள் இந்த கூட்டத்தில் பங்கேற்க முன்வந்துள்ளன. (பி)

WORLD NEWS உலக தரிசனம்

## அயோத்தியா பிரச்சினை: சங்கராச்சாரியார் திட்டம் ஞாயிறன்று வெளியாகும்

(சென்னை)

அயோத்தி ராமஜென்ம பூமிப் பிரச்சினை தொடர்பாக தாம் எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு பல்வேறு கட்சிகளும் ஆதரவு தெரிவித்திருப்பதானது தமக்கு மகிழ்ச்சியளிப்பதாக காஞ்சி காமகோடி பீட கயேந்திர சரஸ்வதி சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

காமகோடி பீட சங்கராச்சாரிய சுவாமிகள் அயோத்தி பிரச்சினைத் தீர்வுக்கு சில யோசனைகளை முன்வைத்து அயோத்தி பிரச்சினையில் சம்பந்தப்பட்டுள்ள முஸ்லிம் பிரிவுகளின் சட்ட ஆலோசனைக் குழுவுக்கு அனுப்பியிருந்தார். அதுபற்றி அக்குழு ஆராய்ந்து ஆலோசனைகள் நடத்தியிருப்பதுடன் சங்கராச்சாரியருடன் நேரில் சந்தித்து சில விளக்கங்கள் கேட்கவிருப்பதாகக் கருதப்படுகின்றது.

சங்கராச்சாரியார் தமது தீர்வுத் திட்ட விபரங்களையும் முடிவுகளையும் முஸ்லிம் தலைவர்களுடன் பேசிய பின்னர் வரும் ஞாயிற்றுக் கிழமை வெளியிடுவதாக அறிவித்துள்ளார். (பி)

## மசூதி ஒன்றை இஸ்ரேலியர் இடித்துத் தள்ளினர்

(ஜெருசலேம்)

இஸ்ரேலில் அரபுகள் அதிகம் வாழும் நாசரேத் நகரில் மசூதி ஒன்றை திங்கட்கிழமை இஸ்ரேல் அதிகாரிகள் இடித்துத் தள்ளினர்.

இந்த மசூதிக்கு அருகே பேராலயம் ஒன்று உள்ளது. யேசுபிரான் இந்த மண்ணில் அவதரிக்கப் போகிறார் என்று முன்கூட்டியே வானதூதர் கபிரியேல் இந்த இடத்தில் நின்றுதான் அறிவித்தார் என்று கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர்.

அதேசமயம் இடிக்கப்பட்ட மசூதி இருந்த இடத்தில் தான் முஸ்லிம் மதத் தலைவர் ஒருவர் அடக்கம் செய்யப்பட்டுள்ளார் என்றும், அதனால் அது புனித இடமென்றும் முஸ்லிம்கள் கூறுகின்றனர்.

இந்தச் சர்ச்சை பல ஆண்டுகளாக இருந்து வருகின்றது.

இந்த மசூதி உரிய அனுமதி இல்லாமல் கட்டப்பட்டுள்ளது என்று கூறி இதை இடிக்க கடந்த மார்ச்சில் இஸ்ரேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த 2000 வது ஆண்டில் போப்பாண்டவர் இங்கு வருவதாக இருந்தது. ஆனால் இந்தச் சர்ச்சை காரணமாக தமது பயணத்தை ரத்துச் செய்துவிட்டார். (பி)


## தமிழ்நாட்டில் அரச ஊழியர் காலவரையறையற்ற வேலைநிறுத்தம்

தமிழ்நாட்டில் அரச ஊழியர்களும், அரச துறை ஆசிரியர்களும் நேற்று தமது 13 அம்சக் கோரிக்கையை முன்வைத்து காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

இந்த வேலை நிறுத்தத்தைத் தடுப்பதற்காக தமிழக அரசு கடும் நடவடிக்கைகளை எடுக்கத் தீர்மானித்திருந்த போதிலும், அரச ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்தனர்.

வேலைநிறுத்தத்தில் இறங்கும் அரச ஊழியர் மீது அவசர பணிகள் சட்டத்தின் கீழ் தமிழக அரசு நடவடிக்கை எடுக்கத் தொடங்கியிருக்கிறது.

தொழிற்சங்கங்களின் முக்கிய தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு வருகின்றனர். (பி)



தாய்வானில் தைபே நகரில் கட்டப்பட்டுவரும் இந்த கட்டடம் 101 மாடிகளைக் கொண்டது. கட்டி முடிக்கப்படின் இதன் உயரம் 1,667 அடியாகும். பின்னர் இது தான் உலகின் மிக உயரமான கட்டடம் என்ற பெருமையைப் பெறும்.

## இன்று ஒரு தகவல்

# புண்ணியம்

எமலோகத்தில் ஒரு ஆசாமியைக் கொண்டு போய் நிறுத்தினார்கள்.

எமதர்ம ராஜா தனது சிங்காசனத்திலே உட்கார்ந்திருந்தார். இந்த ஆள் பரிதாபமாக அவர் முன்னுக்கு நின்று கொண்டிருந்தார். பக்கத்தில் பதிவேட்டைப் புரட்டிக கொண்டு சித்திரபுத்தனார் நிற்கிறார்.

இந்த வேளை என்ன குற்றம் செய்தான் இவன் என்று எமதர்ம ராஜா கேட்டார்.

சித்திர புத்தனார் பதிவேட்டில் அவனுடைய கணக்கைப் பார்த்தார். அவருக்குத் தலையைச் சுற்றியது.

செய்த பாவம் ஒன்றா, இரண்டா அப்படியென்றால் பட்டியல் போட்டுச் சொல்லலாம். பஞ்சமாபாதகங்கள் அத்தனையையும் செய்துள்ளான். அவனுடைய குற்றங்களையெல்லாம் கொப்பிகளிலே தேடி எடுப்பதற்கிடையில் எமது ஆயுள் முடிந்து போகும். எமதர்மன் அவனைப் பார்த்தான். அப்படியென்றால் இவனை நரகலோகத்திலே தள்ளுங்கள் என்று உத்தரவு போட்டார்.

உடனே சித்திர புத்திரனார் எழுந்து இவன் இத்தனை பாவங்கள் பண்ணியிருந்தாலும் ஒரேஒரு புண்ணியம் மட்டும் செய்திருக்கிறான் என்றார். என்ன செயல்? என்ன செயல்? என்று எமராஜா கேட்டார். அதற்கு இவர் ஒரு கிழவிக்கு கோவிலுக்கு வழி காட்டினவன். அதுவும் அதோ அந்தப்பக்கத்தால் போங்கள் என்று சுண்டு விரலால் வழி காட்டினான் என்றார்.

அப்படியாயின் இவனுடைய அந்த விரலுக்கு பன்னீர் தெளித்து சந்தனம் பூசி செர்க்கத்துக்கு அனுப்பு. மற்றப்படி இவனை நரகத்துக்குத் தள்ளு என்று எமராஜா உத்தரவிட்டார். பாவம் செய்தவர்களுக்கு மட்டும் தான் இப்படியென்று நினைக்காதீர்கள். புண்ணியம் செய்து சொர்க்கத்துக்குப் போனவர்களுக்கும் பிரச்சினைகள் இருக்குத்தான்.

கர்னன் ரொம்ப பெரிய கொடையாளி. யார் எதைக் கேட்டாலும் இல்லை என்று சொல்லுவதில்லை.

அவன்கூட பொன்னையும் பொருளையும் தான் தானமாகக் கொடுத்தான். பசி என்று வந்தவர்களுக்கு புசி என்று எதையும் கொடுத்ததில்லை.

ஒருவேளை பசித்தவர்கள் கர்னனிடம் போகாதிருந்திருக்கலாம். யாரும் போகாததாலே விருந்து கொடுக்கும் வாய்ப்பே இல்லாதிருக்கலாம்.

அப்பேர்ப்பட்ட கர்னன் சொர்க்கத்துக்குப் போனான். சொர்க்கத்துக்குப் போகிற யாருக்கும் பசிக்காது. ஆனால் கர்னனுக்குப் பசித்தது. எனக்கு மட்டும் ஏன் பசிக்கிறது? சொர்க்கத்துக்கு வருபவர்களுக்குப் பசிப்பதில்லையே என்று சொர்க்க வாசலில் நின்ற ஒருவரிடம் கேட்டான்.

பூலோகத்திலே நீயாருக்கும் அன்னதானம் செய்யவில்லைப் போலும் அதுதான் பசிக்குதென்று அங்கு நின்றவன் சொன்னான்.

சரியாகப் பசிக்கிறதே என்ன செய்வது என்று கர்னன் அவனிடம் கேட்டான். நீ உன்னுடைய ஆள் காட்டி விரலை வாய்க்குள் வைத்துக் கொள் என்றார். வைத்த சிறிது நேரத்தில் பசி தீர்ந்தது.

இதற்குரிய காரணம் தெரியுமா? ஒரு சமயம் கண்ணனோடை தேர்ப் பாகர்களுக்கு தனது ஆள் காட்டி விரலாலே சாப்பிடும் இடத்தைக் காட்டினானாம்.

அதுவே பெரிய தர்மமாய் கர்னன் கணக்கிலே பதிந்து போச்சாம்.

புராணக் கதைகளிலே உங்களுக்கு நம்பிக்கையிருக்கோ இல்லையோ அதைப் பற்றி நாம் ஆராயப்படாது சொர்க்கம் நரகம் பற்றி ஆராய வேண்டாம். மனிதப் பிறவியினுடைய மகத்துவத்தை அறியுங்கள். அதற்காகத் தான் இந்தக் கதைகள்.

அதுதான் ஒரு பெரியவர் சொன்னார் உண்ணவும் உறங்கவும் பிறந்தவை மிருகங்கள். எண்ணவும் இரங்கவும் பிறந்தவன் மனிதன் என்று. இரக்கம் என்றதும் ஞாபகம் வருகிறது. ஒரு பேச்சாளர் இருந்தார். எந்த ஊருக்கு அவர் பேசப் போனாலும் அவருக்கு 25ரூபா தாள் கொடுப்பார்கள். 25ரூபாவை வாங்கிக் கொண்டு மனம் வருந்துவார்.

ஒரு இடத்தில் பேச்சு முடிந்தது. 25ரூபா கொடுத்தார்கள். வழமையாக மனவருத்தத்துடன் வருகின்றார். காசு கொடுத்தவர் பின் தொடர்ந்து ஓடி வந்தார். 10ரூபா கூடத் தந்துவிட்டேன் தாருங்கள் என்றார். எப்படி இருக்கிறது இரக்கம்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

## விடுதலைப் புலிகளின் பகுதிக்கு மின்சாரம்

# ஏ-9பாதை முழு நாளும் திறக்கும் சாத்தியம்

(வவுனியா)

விடுதலைப் புலிகளுடைய கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பிரதேசத்திற்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இதற்கென ஐரோப்பிய ஆணைகுழு 22மில்லியன் ரூபாவினை வழங்கியுள்ளாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஓமந்தையிலிருந்து விளக்குவைத்த குளம் ஊடாக புளியங்குளம் சந்தி வரை 9.5கிலோமீற்றர் தூரத்திற்கு மின்சார விநியோகத்தை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என வவுனியா மாவட்ட பிரதான மின் பொறியியலாளர் எஸ்.பிரபாகரன் தெரிவித்தார்.

இதற்குத் தேவையான உபகரணங்கள் யாவும் வந்து சேர்ந்துவிட்டன. தற்போது இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் மின் கம்பங்கள் நாட்டும பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, ஓமந்தைக்கும் விளக்குவைத்த குளத்திற்கு மிடையிலான 200மீற்றர் தூரமான சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் கண்காணியில் உள்ள சூனியப் பிரதேசத்திற்கு அருகாமையில் புதைந்துள்ள கண்ணிவெடிகளை அகற்றுவது தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றதாக வவுனியா மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

சூனியப்பிரதேசத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டதும் ஏ-9 பாதை 24மணி நேரமும் திறக்கப்படலாம் என தெரிய வருகின்றது. (உ-13)

# வவுனியா மாவட்ட அபிவிருத்திப் பணிகள் மந்த கதியில் இடம்பெறுகின்றன

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

(வவுனியா)

வவுனியா மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாவட்டச் செயலகத்தில் இணைத் தலைவர்களான வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர், நாடாளுமன்ற உறுப்பினர் இராசா குகனேஸ்வரன் ஆகியோரது தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட அபிவிருக்கிக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம், மாகாண சபைத்திட்டங்கள், நிரல் அமைச்சு திட்டங்கள், நியதிச்சபைகளின் திட்டங்கள். விசேட திட்டங்கள் என்ற வகையாலும் இவவாண்டு 900மில்லியன் ரூபா இவ்வாண்டு வவுனியா மாவட்டத்திற்குக் கிடைத்திருந்தது. கடந்த ஆறுமாத காலத்தில் நடைபெற்ற வேலைத்திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு செய்யப்பட்டது.

அதே நேரத்தில், மாவட்டத்திற்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக 290மில்லியன் ரூபா கிடைத்திருந்தது எனவும் திட்டமிடல் பிரிவினரால் தெரிவிக்கப் பட்டது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவசக்தி ஆனந்தன், றிசாத் பதியுதீன், வடக்கு கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் எஸ்.சுவாமிநாதன். மாகாண பிராந்திய ஆணையாளர் எஸ்.சுந்தரம், மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலாளர்கள் உட்பட சகல திணைக்கள தலைவர்கள், விடுதலைப்புலிகளுடைய வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஆகியோர் இந்த அபிவிருத்தி தொடர்பான மீளாய்வுக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

வவுனியா மாவட்டத்திற்கு தீயணைக்கும் படை பிரிவு ஒன்று அவசியம் என்ற பிரேரணை அமைச்சர் நூர்தீன் மசூரினால் முன்வைக்கப்பட்டது.

இன்றைய சமாதான சூழலில் நாங்கள் ஒன்றுபட்டு அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்கவேண்டும். நிதி பெறுவது பெரிய பிரச்சினையாக இருக்கவில்லை. அதனை பிரயோசனமான முறையில் பயன்படுத்த வேண்டும். கடந்த இரண்டு காலாண்டு காலப்பகுதியில் மந்த கதியிலேயேதான் வவுனியாவில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நடைபெற்றுவந்துள்ளன.

இது விடயத்தில் அதிகாரிகள் உற்சாகத்துடன் பணியாற்ற வேண்டும என அமைச்சர் தனது உரையில் குறிப்பிட்டார். (உ)

## இராசி பலன்

**03.07. 2003**

**(ஆனி 19,வியாழன்)**

**சதுர்த்தி -மு.இ. 10.11வரை**

**ஆயிலியம் - பி.ப.2.32வரை**

**இராகுகாலம் -1.27-2.57**

**சுபநேரம்- 07.27-08.57**

**சதுர்த்தி விரதம், சித்தாமிர்தம்**

**மேடம்**

அதிகாரிகள் பாராட்டு,வியாபார நன்மை, காரிய இடையுறு,போசன சுகம்.

**இடபம்**

அதிகவார்த்தை, கல்வியில் ஆர்வம், மனச் சஞ்சலம், மாதர் நட்பு.

**மிதுனம்**

கூட்டு முயற்சி, வாக்குமேன்மை, தனலாபம், தொழில் விருத்தி.

**கடகம்**

கௌரவக் குறைவு, காரிய அலைச்சல், சிந்தனை மிகுதி, சுபசெலவு.

**சிங்கம்**

நண்பர்கள் உதவி, ஜனவசியம், சயன சுகம், காரிய நன்மை.

**கன்னி**

கோபப்படுதல், எதிர்பாராத நன்மை, நிலை மாற்றம், காரிய தாமதம்.

**துலாம்**

தொழில் சிந்தை, மனமகிழ்ச்சி, கலந்துரையாடல், முயற்சி கைகூடம்.

**விருச்சிகம்**

கடினஉழைப்பு. நல்ல செய்தி, கீழ்ப்படிதல், புத்திசாதுரியம்.

**தனுசு**

உடல் உழைப்பு, கட்டுப்பாடு, வீண்பயம், ஆரேக்கியக் குறைவு.

**மகரம்**

எதிர்பாராத அச்சம், தொழில் விருத்தி, நண்பர்கள் விரோதம், முயற்சி தடங்கல்.

**கும்பம்**

சென்ற இடத்தில் வரவேற்பு, அபூர்வ சந்திப்பு, தொழில் சிந்தை, தனவரவு.

**மீனம்**

திடீர்பயணம், சத்துரு ஜெயம் காரிய நன்மை, செய்தொழில் விருத்தி.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

-வளவன்.

# தங்காலையில் சிக்கிய கப்பல் மாலைதீவில் பதிவு செய்யப்பட்டதாம்

(கொழும்பு)

நேற்றுமுன்தினம் தங்காலை கடற்பரப்பில் சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் 190பேரை ஏற்றிக்கொண்டு இத்தாலி நோக்கிப் புறப்பட ஆயத்தமானவேளை கடற்படையிடம் சிக்கிய "இங்கி சிவல்" என்ற சிறிய கப்பல் மாலை தீவில் பதிவு செய்யப்பட்டதாகவும் கப்பலின் தலைமை மாலுமி ரஷ்ய நாட்டவர் எனவும், ஏனையோர் உக்ரைன் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதும், விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இதேவேளை, இக்கப்பலில் இருந்து கடற்படை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டவர்கள் மற்றும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சட்ட விரோதமாக இத்தாலி செல்ல முயன்று கைதானவர்கள் உட்பட 260பேர் நேற்று தங்காலை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்களை சட்டவிரோதமாக அனுப்பிவைக்க முயன்ற இரு சந்தேக நபர்களை பொலிஸார் தேடி வருகின்றனர். (தி)

# விதவைகளுக்கு வீடமைப்பு 50 குடும்பங்கள் பயன்

(வவுனியா)

யுத்தம் காரணமாக குடும்பத் தலைவர்களை இழந்த விதவைகளுக்கென நிக்கோட் திட்ட நிதி உதவியுடன் வவுனியாவில் உள்ள புதிய சின்னக்குளத்தில் உருவாக்கப்பட்ட வீடமைப்புத்திட்டதில் 50விதவைக் குடும்பங்கள் குடியமர்த்தப் பட்டுள்ளனர்.

அத்துடன், மேலும் யுத்தம் காரணமாக அங்கவீனமான 50பேரும், வறுமையிலும் வறுமைப்பட்ட 50பேரும் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில உள்ள தாலிக் குளத்தில் தற்காலிக வீடுகளில் குடியமர்த்தப்பட்டுள் ளனர்.

சீட் எனப்படும் சமூகபொருளாதார சுற்றாடல் அபிவிருத்தி நிறுவனமும் இவர்களை குடியமர்த்த உதவிகளை வழங்கி அவர்களுடைய சுயதொழிலுக்கும் பங்களிப்புச் செய்துள்ளது.

இவர்கள் நிரந்தரவீடுகளை கட்டிக்கொள்ள வசதியாக நிக்கோட் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு நிதி உதவி வழங்கப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையின் பொதுமுகாமையாளர் வி.சிறீஸ்கந்தவேல் தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் வவுனியா நலன்புரிநிலையங்களில் வசித்து வந்தவர்கள். அவர்களை பொருளாதார ரீதியில் உயர்த்தும் வகையிலேயே இத்திட்டம் அமுலாக்கப்படுகின்றது எனவும் அவர் கூறியுள்ளார். (உ-13)

### ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலை

# துணைவேந்தருக்கு எதிரான குற்றச்சாட்டு நிராகரிப்பு

(கொழும்பு)

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழக துணைவேந்தருக்குஎதிராக பல்கலைக்கழக மாணவர்களால் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை மூன்றாம நிலைக்கல்வி அமைச்சர் கபீர்ஹாசிம் நிராகரித்துள்ளார்.

இது தொடர்பாக கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில், பல்கலைக கழகத்துக்கு வெளியே இருக்கும் சில சக்திகளின் தூண்டுதல்களால் மாணவர்கள் இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். மாணவர்களின் இவ்வாறான செயல்கள் கண்டிக்கத்தக்கன என குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், மாணவர்களின் குற்றச்சாட்டுக்கள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பாக கல்வி அமைச்சு தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும் அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (தி)

## சிறு விளம்பரம்

### மணமகன் தேவை

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பணிபுரியும் படித்த மணமகள்களுக்கு A/L படித்த அல்லது பட்டதாரி மணமகன்கள் உடன் தேவை. ஜாதகம், போட்டோ உட்பட உடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி நா.கந்தையா, சோமசுந்தரம்வீதி, ஆனைக்கோட்டை. (7205)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

நாவலர் வீதியில் தவறவிடப்பட்ட காசோலைகள் சில கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டி வினோ நகைப் பூங்கா, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளவும். (6374)

# பிந்துனுவெவ படுகொலை வழக்குத் தீர்ப்பு இனரீதியாக குற்றமிழைப்போர்க்கு நல்ல பாடம்

## வழங்கறிஞர் ரட்ணவேல் உளந்திறந்து கருத்து

(கொழும்பு)

பிந்துனுவெவ படுகொலைச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட 5 குற்றவாளிகளுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு, இதேபோன்ற ஏனைய வழக்குகளுக்கு ஒரு முன்னோடியாக இருக்கவேண்டும்.

ஏனென்றால், முன்னைய மயிலந்தனை வழக்கில் இது மாதிரியான தீர்ப்பு வழங்கப்படவில்லை. அதற்குக் காரணம் அது யூரி சபைக்கு முன்னால் நடத்தப்பட்டதே. இதனால், குற்றவாளிகள் உரிய தண்டனையைப் பெறாமல் தப்பிவிட்டார்கள்.

2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் 25 ஆம் திகதி பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் 27 தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கான வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றில் நடைபெற்றபோது, இவ்வழக்கில் ஆஜராகியிருந்த வழக்கறிஞர் ரட்ணவேல் இதுபற்றி வெளிநாட்டு ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்துக் கூறுகையில்,

பிந்துனுவெவ படுகொலைச் சம்பவம் தொடர்பாக மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பானது இன நீதியாக குற்றம் இழைத்தவர்களுக்கு ஒரு நல்ல பாடமாக அமையும் என நம்புகிறேன்.

இத்தகைய தீர்ப்பினை, அதாவது தேவையற்ற படுகொலைகளை புரியும் குற்றவாளிகளுக்குத் தகுந்த தண்டனை அளிப்பதை மனித உரிமைகள் அமைப்புகளும் வரவேற்றுள்ளன.

இதேவேளை, மேற்படி பிந்துனுவெவ படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு மேல் நீதிமன்றினால் வழங்கப்பட்ட "மரணதண்டனை" தீர்ப்பானது அதி உச்சத் தண்டனையாக இருப்பதால் அதற்கு எதிராக அவர்கள் மேன்முறையீடு செய்வார்கள் என்றே நான எதிர்பார்க்கின்றேன்.

அவ்வாறு மேன்முறையீடு செய்யும் உரிமையும் அவர்களுக்கு உண்டு. அவ்வாறு மேன்முறையீடு செய்யப்படும் பட்சத்தில் தகுந்த சாட்சிகள் இல்லாமல் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது, சரியான அடையாளம் கண்டு பிடிக்கப்படவில்லை போன்ற விடயங்கள் சரியான முறையில் நிரூபிக்கப்பட்டால், இந்த மரணதண்டனைத் தீர்ப்பானது ஆயுட்தண்டனைத் தீர்ப்பாக குறைக்கப்படலாம். அதுவும் இந்த மேன்முறையீடானது நீதிமன்றிற்கு வரும்போதுதான் இதனை நாம் உறுதியாகக் கூறமுடியும்.

அதேசமயம் மேல் நீதிமன்றினால் வழங்கப்பட்ட இந்தத் தீர்ப்பு தொடர்பாக முக்கியமான விடயங்கள் ஒன்றை கூற விரும்புகின்றேன்.

இந்தத் தீர்ப்பு மிகப் பலமானது, சட்ட விளைவுகள், நிகழ்வுகள் எல்லாவற்றையும் அடிப்படையாகக் கொண்டு மிக நீதியாக வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய தீர்ப்பானது தேவையற்ற படுகொலைகள் நாட்டில் தொடர்ந்தும் நடைபெறுவதைத் தடுக்க வழிவகுக்கும் என்றார். (உ-10)

# முச்சக்கர வண்டிகளை சோதிக்க விசேட திட்டம்

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபைக்குள் தற போது சேவையில் ஈடுபட்டு வருகின்ற மற்றும் புதிதாக சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளை, திடீர் சோதனை செய்வதற்கு விசேட திட்டமொன்று பொலிஸ் தலைமையகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் முச்சக்கரவண்டிகள் வழிமறிக்கப்பட்டு திடீர்சோதனையிடப்படுவதுடன், சந்தேகத்துக்கிடமானோர், அதில் பயணம் செய்தால் அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவர் என கொழும்பு போக்குவரத்துப் பணிப்பாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அல்பிரட் விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

குற்றச்செயல்களையும், வாகன விபத்துக்களையும் கட்டுப்படுத்தும் நோக்குடனேயே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# புளொட் அலுவலகம் மீது கைக்குண்டு வீச்சு

(திருகோணமலை)

திருகோணமலையில் உள்ள புளொட் அலுவலகம், நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோரின் கைக்குண்டு வீச்சுக்கு இலக்காகியுள்ளது.

இக்குண்டுவீச்சுச் சம்பவத்தின் போது எவரும் காயமடையவில்லை என புளொட் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனை அடுத்து, அப்பகுதி பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. (தி)

# உரியவிதமாய் நாய் வளர்க்கத் தவறின் சட்டத்தின் பிடியில் சிக்க நேரிடும்

## உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஜமானர்களுக்கு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் வளர்ப்பு நாய்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதையடுத்து, இதனைத் தடுத்து நிறுத்தும் விதத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் புதிய நடைமுறைகளை அமுல்படுத்தியுள்ளார்.

இதுவிடயத்தில் விரிவான சுற்றுநிருபம் ஒன்றையும் அவர் சகல உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

அதன் விபரம் வருமாறு,

நாய் வளர்ப்பதற்காக, பிரதேச/நகர சபைகளின் உரிமத் தகடுகள் கட்டப்பட்ட நாய்கள் கட்டாக்காலிகளாக வீதிகளில் மலங்கழிப்பதுடன், திரிந்தும் அயல்வீடுகளில் புகுந்தும், மனிதர்களை கடிப்பதாக எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பாயில் படுக்க வைத்திருந்த பச்சிளம் குழந்தைகளும் உரிமத் தகடுகள் கட்டப்பட்ட நாய்களால் கடிக்கப்பட்டுள்ளதாகவும், உரிமத்தகடுகளை வழங்கி கட்டாக்காலிகளாக நாய்கள் உலாவுவதை அனுமதிக்கும் நகர சபை, பிரதேச சபைகள் மீது வழக்குத்தொடருவது பற்றி ஆராயப்படுவதாகவும் அறிகின்றேன்.

நாய் வளர்ப்பதற்கான உரிம விணணப்பத்தில் நாயை வளர்ப்பிடத்திற்கு வெளியே செல்ல அனுமதிக்க மாட்டேன் என்ற உறுதியுரையை நாய் வளர்ப்பவரிடம் பெற்ற பின்னரே உரிமங்களை வழங்கவேண்டும் என இதற்கு முன் நான் அனுப்பிய சுற்றுநிருபத்திற்கு அமைவாக, நல்லூர்ப் பிரதேசசபை மாத்திரமே விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்து அதன் பிரதியை எனக்கு அனுப்பியுள்ளது.

ஏனைய பிரதேச சபைகள், நகர சபைகள் இதுவரை அத்தகைய விண்ணப்பங்களைத் தயாரிக்காவிடின், இத்துடன் இணைக்கப்பட்டுள்ளவாறான படிவத்தினை உடனடியாகத் தயாரித்து பயன்படுத்தவும். அதன் பிரதி ஒன்றை எனக்கு அனுப்பிவைக்கவும்.

இவ்வாறு நாய் வளர்ப்பவரிடம் நாயை வெளியேவிடோம் என்ற உறுதியுரை பெறப்படாது உரிமம் வழங்கப்பட்டிருந்தால், இத்தகைய உரிமம் பெறப்பட்ட நாய்கள் கடிக்கும் சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்து, இதற்காக குற்றப்பணம், நட்டஈடு போன்றவைகள் விதிக்கப்பட்டால், அப்பணத்தை சம்பந்தப்பட்ட சபையை நிர்வகிப்பவர்களே செலுத்த வேண்டியிருக்கும் என்பதை அறியத்தருகின்றேன்.

விண்ணப்பப் படிவத்தில் காணப்படும் விண்ணப்பதாரரின் உறுதியுரையே சபைகளை இச்சம்பவங்களுக்கு பொறுப்பேற்பதனின்றும் விடுவிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய ஒரே ஆவணம் என்பதால் இவ் விண்ணப்பப் படிவங்களை தெளிவாகவும், முறையாகவும் அச்சிட வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும் என்றுள்ளது.

இதேவேளை, மேற்படி விண்ணப்பப் படிவத்தில் உள்ள உறுதியுரையில்,

இவ்விண்ணப்பத்தில் நாய் வளர்க்கப்படும் இடம் எனக் குறிப்பிட்டுள்ள இடத்தின் எல்லையை விட்டு நாய் வெளியேறாத வகையில் அதனை வளர்ப்பேன். சிகிச்சைக்காகவோ, வேறு காரணங்களுக்காகவோ, வளர்ப்பிட எல்லைக்கு வெளியே நாயைக் கொண்டு செல்வதானால், முறைப்படி சங்கிலியால் கட்டி வாய மூடியிட்டு அதனை அழைத்துச் செல்வேன். நாயை நோயிலிருந்து பாதுகாக்கவும், நோயுற்ற நாயில் இருந்து மனிதருக்கு ஆபத்தான நோய்கள் தொற்றுவதை தடுக்கவும், நாய் பிறந்து 3 கிழமைகளில் இருந்து உரிய கால இடைவெளிகளில் குடற்புழு நீக்க மருந்து கொடுக்கப்படவேண்டும் என்பதையும் தடுப்பூசிகளை கால கிரமத்தில் ஏற்றுவிக்க வேண்டும் என்பதனையும் அறிவேன். மேலதிக விபரங்களை மிருக வைத்தியரிடம் கேட்டு அறிந்து கொள்வேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# பிந்துனுவெவ விசாரணைகளில் பொய்ச்சாட்சியங்களுக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

பிந்துனுவெவ தடுப்புமுகாம் படுகொலை வழக்கு விசாரணைகளின் போது பொய்ச் சாட்சியம் அளித்தவர்களுகது எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவ்வழக்கு விசாரணைகளை நடத்திவந்த மூன்று நீதியரசர்கள் கொண்ட குழு சட்டமா அதிபருக்கு மேற்படி நடவடிக்கை தொடர்பாக இப்பணிப்புரையை விடுத்துள்ளது.

வாதிகளைப்பாதிக்கும் வகையில் இவர்களது சாட்சியங்கள் அமைந்திருந்தமையால் இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கும்படி மூன்று நீதியரசர்களும் உத்தரவிட்டுள்ளனர்.

பொய்ச்சாட்சியம் அளித்த அனைவரையும் இம்மாதம் 27 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கும்படியும் நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர். (தி)

# கணித, விஞ்ஞான பொது அறிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரியின் விஞ்ஞான மன்றம் வருடாவருடம் மாவட்ட ரீதியில் பாடசாலைகளிடையே நடத்திவரும் கணித, விஞ்ஞான பொது அறிவுப் போட்டி எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப.2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இப்போட்டி கனிஷ்ட பிரிவு (தரம் 6-8) இடைநிலைப் பிரிவு (9-11) சிரேஷ்ட பிரிவு (தரம் 12-13) ஆகிய மூன்று பிரிவுகளில் நடத்தப்படவுள்ளது.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்குப் பெறுமதி மிக்க பரிசில்களும், 10 ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படுவதுடன், திறமைச் சித்தி பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

பாடசாலை ரீதியாக மாணவர்களிடம் இருந்து இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன், ஒரு பாடசாலையில் இருந்து பெருந்தொகையான மாணவர்கள் பங்குபற்றுமிடத்து அதேபாடசாலையில் பரீட்சை நிலையம் அமைப்பதறகான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குறித்த பாடசாலையில் இருந்து பங்குபற்றும் மாணவர்களின் எண்ணிக்கையின்படி கூடுதலான மாணவர்கள் பங்கேற்கும் பாடசாலைக்கு சுற்றுக் கேடயங்கள் வழங்கப்படுவதும், கடந்த ஆண்டு இப்பரீட்சையில் 3 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றியதும் குறிப்பிடத்தக்கது. (உ)

# முஸ்லிம்களின் நலன்கள் பற்றி விரைவில் செயலகத்தில் மாநாடு

## அமைச்சர் ஹக்கீம் ஏற்பாடு

(கொழும்பு)

வடபகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள முஸ்லிம் மக்களின் நலன்கள் குறித்து ஆராய்வதற்கான உயர்மட்ட மாநாடு ஒன்று விரைவில் யாழ். அரச செயலகத்தில் நடைபெறும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், கப்பல்துறை மற்றும் துறைமுக அபிவிருத்தி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இதறகமைய யாழ். குடாநாட்டுக்கும், மன்னாரிற்கும் நேரில் சென்று அங்கு மீளக் குடியமர்ந்துள்ள மக்களின் நிலைமைகளை அவதானித்து அது பற்றிய அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு தாம் சமாதான செயலக மேலதிகப் பணிப்பாளருக்கு உத்தரவிட்டதாகவும்,

அவ்வாறு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதும் தான் விரைவில் யாழ் சென்று யாழ். அரச செயலகத்தில் அரச உயர் அதிகாரிகளை கூட்டி மாநாடு ஒன்று நடத்தவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-10)

# 1400 தோட்டத் தொழிலாளர் திடீர் வேலை நிறுத்தப் போராட்டம்

(கொழும்பு)

சீனக்கொலை மற்றும் கொட்டியாகலைத் தோட்டங்களைச் சேர்ந்த 1400 தோட்டத் தொழிலாளர்கள் நேற்று முன்தினம் திடீர் வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

பொகவந்தலாவ, சீனக்கொலை ஆகிய பிரதேசங்களில் இரத்தினக்கல் அகழ்வதற்கு வெளியாருக்கு அனுமதி வழங்கப்பட்டதை அடுத்தே இப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது இரத்தினக்கல் ஆபரணங்கள் அதிகார சபை வெளியாருக்கு இரத்தினக்கல் அகழ்வதற்காக சீனக்கொலைத் தோட்டத்தில் 46 நிலக்குண்டுகளை ஏலவிற்பனைமூலம் வழங்கியுள்ளது.

இதேவேளை, தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் பிரதேசத்துக்கு இரத்தினக் கல் ஆபரண அதிகாரிகள் குழுவொனறும், ஹற்றன் பொலிஸ் பிரிவுக் குழுவொன்றும் நேரில் செல்ல முற்பட்டபோது, அவர்களை அப்பிரதேசத்துக்கு செல்ல விடாது தோட்டத் தொழிலாளர்கள் வழிமறித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இப்பிரதேசத்துக்கு கலகம் அடக்கும் பொலிஸார் விரைந்து சென்றதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# போக்குவரத்து சேவையை சீராக்க 50 பேருந்துகளுக்கு தேவைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் திருப்திகரமான பேருந்துச் சேவையை ஆற்றுவதாயின் இன்னும் மேலதிகமாக 50வரையான பேருந்துகள் தேவையென வடபிராந்திய போக்குவரத்துச் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்பொழுது 100 பேருந்துகள் மாத்திரமே சேவையில் உள்ளன. இவற்றைக் கொண்டு சரியான முறையில் சேவைகளைச் சீரமைக்க முடியவில்லை.

தவிரவும், மக்கள் சேவைக்கென வரவழைக்கப்பட்ட 20 வரையான பேருந்துகள் படையினர் பாவனையில் உள்ளன.

இப்பேருந்துகளை மீள ஒப்படைக்கும் பட்சத்தில் போக்குவரத்துச் செய்வதில் மக்களுக்குள்ள நெருக்கடிகளை ஓரளவுக்கேனும் குறைக்க முடியும் எனவும் அவ் வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (உ-4)

# பாதுகாப்பு, உள்துறை அமைச்சுகளை ஜனாதிபதி பொறுப்பேற்கவேண்டும்

## மக்கள் கோருவதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சு மற்றும் உள்துறை அமைச்சு ஆகிய இரு அமைசசுகளையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொறுப்பேற்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் மகிந்த இதனைத் தெரிவித்துள்ளார்.



அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், இவ்விரு அமைச்சுக்கள் மாத்திரமன்றி, முழு அரசாங்கமும் இன்னும் ஓரிரு மாதங்களில் பொது ஜன ஐக்கிய முன்னணியின் கீழ்வரும.

மக்கள் நலன்கருதி மக்கள் மயமான அரசு ஒன்றை அமைப்பதற்காக மக்கள் விடுதலை முன்னணியுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன. குறுகிய காலத்தில் அது நிறைவேறும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் இக் கூட்டமைப்பு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடவுள்ளன.

ஜனாதிபதி பாதுகாப்பு மற்றும் உள்துறை அமைச்சுகளைப் பொறுப பேற்றுக் கொள்வதற்காக கடந்த சில மாதங்களாக நடவடிக்கை எடுத்து வருவது தெரிந்ததே. (தி)

## அழையா விருந்தாளியாகச் சென்ற மேல்மாகாண முதலமைச்சர்

### பாடசாலை கணனிக் கூடத்தை பலவந்தமாக திறந்துவைப்பு

(கொழும்பு)

கோட்டை ஆனந்த மகளிர் வித்தியாலய கணனிப் பிரிவை மேல்மாகாண முதலமைச்சர் ரெஜினோட் குரே கடந்த திங்கட்கிழமை பலவந்தமாக திறந்துவைத்துள்ளார்.

அமைச்சர்களான ரவி கருணாநாயக்க மற்றும் கருணாசேன கொடித்துவக்கு ஆகிய இருவரினாலும் நேற்று முன்தினம் உத்தியோகபூவமாகத் திறந்துவைப்பதற்கு ஏற்கனவே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த நிலையில் அதற்கு ஒருநாள் முன்னதாகவே பாடசாலை அதிபரின் எதிர்ப்புக்கு மத்தியிலும் முதலமைச்சர் இக்கணனிப் பிரிவை பலவந்தமாக திறந்து வைத்துள்ளார் என கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேல் மாகாண சபை முதலமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில்,

மேல்மாகாண சபைக்குச் சொந்தமான இப்பாடசாலையில் கணனிப் பிரிவை அமைக்க மேல் மாகாண சபையே நிதி ஒதுக்கியது. அத்துடன், அதற்குத் தேவையான கணனிகளை உலக வங்கி வழங்கியது.

அத்துடன், எனக்கு எந்தவித அழைப்பும் விடாமல் இந்தத் திட்டத்துக்கு எந்தவித செலவும் செய்யாத மத்திய அரசின் கல்வி அமைச்சர் இதனைத் திறந்துவக்க நடவடிக்கை எடுத்துள்ளார் எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். (தி)

# டோக்கியோ மாநாட்டைப் புலிகள் புறக்கணித்தமைக்கு வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் ஜப்பானில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் டோக்கியோ மாநாட்டை நிராகரித்ததானது வரவேற்கத்தக்க விடயம்.

இவ்வாறு புதிய ஜனநாயக் கட்சியின் பொதுச் செயலாளர் கா. செந்தில்வேல் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள கட்சியின அலுவலகத்தில் நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கட்சியின் அரசியல் குழு உறுப்பினர்களான சட்டத்தரணி எஸ்.தேவராஜா மற்றும் எஸ்.நவரட்ணம், வட பிரதேச செயலாளர் கே.கதிர்காமநாதன் ஆகியோர் கலந்துகொண்ட இம்மாநாட்டில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

டோக்கியோ மாநாட்டை நிராகரித்த புலிகளின் முடிவை நாம் வரவேற்கிறோம்.



ஏனெனில் தற்போது ஆட்சியில் இருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் தந்திர அரசியலை விட மிக வேகமான தந்திரத்துடன் செயற்படுகிறார்.

இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் துணையுடன் தனது நோக்கத்தை நிறைவேற்ற முனைந்து வருகின்றார்.

அமெரிக்க இராஜதந்திரி ஆமிடேஜ், தமிழ்மக்களின் அபிலாஷைகளுக்கு மாறான கருத்துக்களை வெளியிட்டு தமிழ் மக்களை மிரட்டி வருகிறார்.

நோர்வே அனுசரணையாளராகச செயற்பட்டாலும் அதன் பின்னணியில் அமெரிக்காவே செயற்படுகிறது.

ஏகாதிபத்திய நாடுகளின் மிரட்டலுககுப் பயந்து புலிகள் இம் மாநாட்டில் கலந்துகொண்டிருந்தால் நீண்ட காலமாக இரத்தம் சிந்தி உழைத்த விடுதலை என்ற இலட்சியம் கேள்விக்குள்ளாக நேரிட்டிருக்கும்.

17 மாதங்களாகத் தொடர்ந்து வரும் சமாதான நிலையின் ஊடாக மக்கள் எதிர்பார்த்த மீள் குடியமர்வு, இயல்பு வாழ்வு என்பன நடைமுறைக்கு வரவில்லை.

இந்த நிலையில் இனவாத சக்திகளுக்கும், அந்நியநாட்டுச் சக்திகளுக்கும் இடமளியாது செயற்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதான முயற்சியை முன்னெடுத்தாலும் அவரிடம் இனவாதப் போக்கு இல்லையென்ற முடிவுக்கு நாம் வந்துவிடமுடியாது என்றும் செந்தில்வேல் கூறினார்.

(த-4,43)


## பயிலுநர் ஆட்சேர்ப்பு

**வலம்புரி அலுவலகத்தில் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு பயிலுநர்கள் ஆட்சேர்க்கப்படவுள்ளனர்.**

- ✦ கணனிக் கற்கை *(இருபாலாரும்)*
- ✦ ஒப்புநோக்குதல் *(இருபாலாரும்)*
- ✦ ஓவ்செற் இயந்திரம் இயக்குதல் *(ஆண்கள் மட்டும்)*
- ✦ பத்திரிகை மடித்தல் *(ஆண்கள் மட்டும்)*
- ✦ செய்தி சேகரிப்பு *(இருபாலாரும்)*
- ✦ வயதெல்லை: 20-28

*கணனி மற்றும் ஒப்புநோக்குநர்களுக்கான கல்வித்தகமை*

க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி

செய்தி சேகரிப்பாளர்கள்:

க.பொ.த (சா.) தரத்தில் சித்தி

**பயிற்சிக் காலத்தில் மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்.**

ஆர்வமுடையவர்கள் தாம் விரும்பும் பயிற்சிநெறியைக் குறிப்பிட்டு சுய விபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் 4.7.2003 வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு வலம்புரி அலவலகத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் தரவும்.

வலம்புரி,
இல. 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

ஆளணி முகாமையாளர்.


## மணிபல்லவத்தில் மஹோற்சவம்

### இன்று ஐந்தாம் திருவிழா



## நயினை நாகபூசணி அம்மன் பாமாலை

### அனைவரையும் ஒற்றுமையாய் வைப்பாய்

*முன்னாளில் மகோதரன் குலோதரன்*
*மூண்டபெரும் பகைபோக்கி முகிழ்த்த சாந்தி,*
*தன்னைநிலை நாட்டிவளர் நயினைதீவின்*
*தாயாகி தண்ணளியைத் தந்தாய் அம்மா!*
*பின்நாளில் பிள்ளைகட்குள் பிணக்குமேலாய்(ப்)*
*பெருகிடுதல் கண்டனோ பேசாநின்றாய்?*
*அன்னையே நீ அமைதியினை நாட்டி நாட்டில்*
*அனைவரையும் ஒற்றுமையாய் வைப்பாய் என்றும்.*

**நயினைக் கவிஞர் நாகசண்முகநாதபிள்ளை**

### நெருப்பதனை அணைப்பவளே

தோசங்கள் நீக்குபவளே
துயரங்கள் போக்குபவளே
பாசம்பொங்கு வாழ்வதனைத்
தந்தருள் புரிபவளே
தேசமதை எரிக்கும் யுத்த
நெருப்பதனை அணைப்பவளே
நேசமுடன் தீர்வுகாண
நிதமருளும் நயினைத்தாயே!

**இராம ஜெயபாலன்.**

### நன்மைதரு நயினையுறை நாகம்மை

ஏங்கிவருமடியாரைத் தாங்குமொரு சக்தி
இல்லையொரு பிள்ளையெனில் அருளுமொரு சக்தி
தாங்கிவரும் துன்பத்தை தளர்த்துமொரு சக்தி
சர்வதய பொறையுடைய தார்மீக சக்தி
பாய்ந்துவரும் கடல்மீது அலையாத சக்தி
பார்மீது நிலையான பார்வதியின் சக்தி
(நயினைத்தீவின் கடலோரத்தில்)
நன்மைதரு நயினையுறை நாகம்மை அம்மா
கண்ணருளில் கருணைமொழி காமாட்சி அம்மா
மின்னலிடை ஒளிருமெழில் மீனாட்சி அம்மா
விண்ணவரும் துதிபாடும் விசாலாட்சி அம்மா
(நயினைத்தீவின் கடலோரத்தில்)
அன்னையருள் ஓங்குமெழில் அபிராமி அம்மா
ஆழ்கடலில் மத்தியுறை நாகாச்சி அம்மா
தஞ்சமென வந்தால் நெஞ்சுருகி நின்றால்
ஆத்தா அம்மா வருவார் அருள்வார்.
(நயினைத்தீவின் கடலோரத்தில்)

**பொன் பரமநாதன்**

### அருளார் கானமும்

எடுப்பு

உன்னடி போற்றி உள்ளமதில் நிறைந்து
உலகாளும் நாயகியே நயினையின் அம்மையே

தொகுப்பு

இன்னலில் நினைந்தே உன்புகழ் பாடினோம்
இகமதில் அருள்தரும் இறையடி சரணமே

முடிப்பு

அன்ன தானமும் அருளார் கானமும்
பின்ன மின்றியே தினமும் நடக்குதே
என்ன விந்தையோ எங்கள் தாயே
அன்னை நாகம்மா அருளினை தாருமே

**என். பிரமசீலன் கோண்டாவில்**

### ஆலய மண்டபத்தில் இன்று ஆன்மீக சொற்பொழிவு

சைவப்புலவர் கந்தசத்தியதாசன்

*(ஆசிரியர், இராமநாதன் கல்லூரி)*

# வானொலி நாடகங்கள் அனைத்து மக்களாலும் விரும்பிக்கேட்கப்படும் சிறப்புபெற்றுள்ளன

உலகம் முழுவதிலும் இலக்கிய வடிவங்களும் கலைகளும் காலத்திற்குக் காலம் மாற்றம் அடைந்தே வந்திருக்கின்றன. இது வானொலி-தொலைக்காட்சி நாடகங்களின் காலம். இன்று அந்த நாடகங்களே அதிகமாக எழுதப்படுகின்றன. நடிக்கப்படுகின்றன. பார்க்கப்படுகின்றன!

அவற்றிலும் வானொலி நாடகங்களே முன்னணியில் உள்ளன. இன்று வானொலிப் பெட்டிகள் இல்லாத வீடுகள் உண்டா? அகதி முகாம்களில் கூட வானொலி கேட்கின்றார்கள். அதனால் வானொலி நாடகங்கள் நாட்டின் மூலைமுடுக்குகளிலெல்லாம் ஒலிக்கின்றன. வீட்டுக்கு வீடு ஒலிக்கின்றன. வானொலியைப் போட்டுவிட்டால், வீட்டில் உள்ளவர்கள்அத்தனை பேரும் நாடகம் கேட்கிறார்களே! சிறுவர் முதல் கண் தெரியாத பெரியவர்கள் வரை கேட்கிறார்கள்!

### வானொலி தொலைக்காட்சி நாடகங்கள்

இந்தியாவில் மற்ற எந்த ஊடகத்தையும்விட வானொலியே அதிக மக்களைச் சென்றடைகின்றது என்று ஒரு கணக்கு எடுத்து வைத்திருக்கிறார்கள். இலங்கையில் அந்த மாதிரியான கணக்கெடுப்பு எதுவும் நடத்தப்படவில்லை.

தொலைக்காட்சி நாடகங்களுக்கு இந்தச் செல்வாக்கு இல்லை. அதைப்பார்ப்பதனால் பெருந்தொகைப் பணம் செலவிட்டு ரீ.வி. பெட்டி வாங்க வேண்டும்.மின்சாரம் வேண்டும். மேலும் தமிழில் வானொலி நாடகங்கள் தயாரித்து ஒலிபரப்பப்படும் அளவுக்கு ரி.வி. நாடகங்கள் தயாரித்து ஒளிபரப்பப்படுவதில்லை. அந்த நாடகங்களை எங்கும் எந்த நேரமும் பார்க்க முடியாது.

சினிமாவிலும் நாடகம் இருக்கிறது. ஆனால் அது பல கலைகளின் சங்கமம். அங்கே ஏனைய கலைகள் நாடகத்தை அமுக்கிவிடுகின்றன. சினிமாப்படம் தயாரிப்பதற்கும் பெருந்தொகைப்பணம் வேண்டும். அதைப் பார்ப்பதற்கும் பணம் செலவிட வேண்டும்.

இலங்கைத் தமிழர் அகதிகளாகச் சென்று குடியேறி வாழும் எல்லா நாடுகளிலும் வானொலி நிலையங்கள் தமிழ் நாடகங்களை ஒலிபரப்புகின்றன. வடதுருவத்திற்கு அண்மையில் உள்ள நோர்வே, கனடா நாடுகளில் இருந்து தென் துருவத்திற்கு அண்மையில் உள்ள அவுஸ்திரேலியா, நியூசிலாந்து எல்லா நாடுகளிலும் தமிழ்நாடகங்கள் ஒலிக்கின்றன. இந்த நாடுகளில்உள்ள வானொலி நிலையங்கள் பல, நாடகம் எழுதும் போட்டிகளில் எனக்குப் பரிசுகளும் தந்திருக்கின்றன. உலக வானொலி என்ற ஒரு அமைப்பு கனடாவில் இருந்து ஒலிபரப்புகின்ற தமிழ் நாடகங்களை உலகம் முழுவதும் கேட்கின்றது. தமிழ் மக்கள் அவற்றை விரும்பிக்கேட்பதால் தானே அந்த வானொலி நிலையங்கள் நாடகங்களை ஒலிபரப்புகின்றன? வானொலி நாடகங்களின் செல்வாக்கினையும் சிறப்பினையும் இந்த வானொலி நிலையங்களே உலகம் முழுவதிலும் பறைசாற்றி நிற்கின்றன.

லண்டன் பி.பி.சி நிலையம் தமிழ் உட்பட உலகின் பல மொழிகளிலும் நாடகங்களைத் தயாரித்து ஒலிபரப்புகின்றது. அமெரிக்க வானொலி நிலையங்களும் பல மொழிகளில் நாடகங்களை ஒலிபரப்புகின்றன. அப்படியே உலகின் பல்வேறுநாட்டு வானொலி நிலையங்களும் தத்தம் நாட்டு மொழிகளில் நாடகங்களை ஒலிபரப்புகின்றன.

### மாநில மொழிகளில் நாடகங்கள

இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்திலும் அந்தந்த மாநில மொழிகளில் நாடகங்கள் தயாரித்து ஒலிபரப்பப்படுகின்றன. அரசாங்க மொழியாக அங்கீகரிக்கப்படாத மொழிகளில் கூட நாடகங்கள் ஒலிபரப்பப்படுகின்றன.

தமிழ்நாட்டில் பல வானொலி நிலையங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் தனித்தனியாக நாடகங்களைத் தயாரித்து ஒலிபரப்புகின்றன. ஒவ்வொரு மாநிலமும் ஒவ்வொரு ஆண்டும் வானொலி நாடக விழா கொண்டாடுகின்றது. பல்வேறு வானொலி நிலையங்கள் தயாரித்த நாடகங்களிடையே போட்டி வைத்து பரிசுகளும் வழங்கப்படுகின்றன. அதைவிட ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு ஆண்டும் ஒலிபரப்பப்பட்ட நாடகங்களில் சிறந்த நாடகத்திற்குப் பரிசு வழங்குகிறார்கள். ஒரு மொழியில் பரிசு பெற்ற நாடகத்தை இந்தியாவின் எல்லா மொழிகளிலும் மொழி பெயர்த்து தயாரித்து ஒலி பரப்புகின்றனர்! எந்த இலக்கிய வகைக்கு இவ்வளவு பெரிய மரியாதை கிடைக்கிறது?

வானொலி நாடகத்தின் சிறப்பையும் செல்வாக்கையும் எடுத்துச் சொல்ல இவ்வளவும் போதுமா? அல்லது இன்னும் சொல்லவா?

இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவை வானொலி நாடகவிழா கொண்டாடவில்லைதான். ஆனால் பலமுறை வானொலி நாடகப் போட்டிகள் வைத்து பரிசுகள் வழங்கியிருக்கிறது. அவற்றில் எனக்கு இரண்டு முறை முதலாம் பரிசு கிடைத்தது. ஒருமுறை மூன்றாம் பரிசு திருமதி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் தமிழ்ச் சேவைப் பணிப்பாளராக இருந்த காலத்தில் 2001ஆம் ஆண்டு முதன் முதலாக ஒரு நாடக விழாவை நடத்தினார். என்னிடமிருந்து பிறந்த மண் என்ற நாடகத்தை வேண்டிப் பெற்று, வானொலிக் கலைஞர்களே அதனை மேடையில் நடித்தனர். அந்த நாடகம் இலங்கை முழுவதிலும் அஞ்சல் செய்யப்பட்டது.

### நாடகம் எழுதுதல்

நாடகம் எழுதுவதன் பிரதான நோக்கம் அதை நடிப்பதே. நடிக்கப்படாத நாடகத்தால் அதிக பயனில்லை. ஒரு நாடகத்தை அரங்கேற்றுவதில் உள்ள சிரமங்களை எண்ணிப் பார்த்தே, பலர் நாடகம் எழுதுவதில்லை. மேடை மண்டப வசதிகள், ஒலி ஒளி அமைப்பு, நடிக நடிகையர்-முக்கியமாக நடிகையர்-பின்னணி இசை, செலவுகள் என்று பலவற்றையும் கருத்தில்கொண்டே நாடகம் எழுத வேண்டியுள்ளது. வானொலி நாடகம் எழுதும்பொழுது இவற்றில் ஒன்றைப் பற்றியும் கவலைப்படவேண்டியதில்லை!

வானொலி நாடகாசிரியன் பூரண சுதந்திரத்துடன் தான் விரும்பிய அழகுகளையெல்லாம் அமைத்து நாடகம எழுதுகின்ற பொழுது, நாடகத்தின் தரமும் உயர்கிறது. அதை வானொலி நிலையத்திற்கு அனுப்ப, அவர்கள் அதைத்தயாரித்து ஒலிபரப்புகின்றனர். அனுபவம்மிக்க நடிக நடிகையரது நடிப்பு, பயிற்றப்பட்ட தயாரிப்பாளரது திறமையான தயாரிப்பு ஆகியவற்றில் நாடகம் மேலும் மெருகு பெற்றுத் திகழும். நேயர்களுக்கு நல்ல நாடக விருந்தும் கிடைக்கிறது.

சினிமா தொலைக்காட்சி இரண்டிற்கும் இல்லாத ஒரு சிறப்பு வானொலி நாடகத்திற்கு உண்டு. வானொலிக்காக எதையும் நாடகமாக்கலாம். எப்படியும் நாடகமாக்கலாம். நாடகாசிரியனது ஆற்றலும்,. தயாரிப்பாளனதுதிறமையும் இணைகின்றபொழுது ரசிகர்களுக்குத் திறமான நாடகத்தை வழங்கலாம்.

எந்தக்கருத்தையும் மிக இலகுவாக மக்கள் மனதில் பதியவைத்து விடலாம். வானொலி நாடகத்தின் மூலம அவர்கள் தங்களை அறியாமலே நாடகத்துடன் அந்தக்கருத்தையும் உள்வாங்கிக்கொள்கின்றனர்.

பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளிவரும் கதைகளை வாசிப்பவர்களில் பெரும்பாலானோர் அடுத்த கணமே அவற்றை மறந்தும் போவர். ஆனால் ஒரு நல்ல வானொலிநாடகத்தை இலகுவில் மறந்துவிட முடியாது. நாடகம் ஒலிபரப்பப்பட்டுக் கொண்டிருக்கிறபொழுதே, அதன் கதையும் நடிப்பும் பின்னணி இசையும் தயாரிப்பாளர் கையாளுகின்ற உத்திகளும் எங்களது முழுக் கவனத்தையும் நாடகத்தின்பால் ஈர்க்கும். ஒலிபரப்பு முடிந்த பின்பும் அந்த நாடகம் காதுகளில ஒலித்துக்கொண்டிருக்கும். ஒருமுறை பதிவு செய்யப்பட்ட நாடகம் பலமுறை ஒலிக்கும்!

நாளிதழ்களும் சஞ்சிகைகளும் நாடகங்களைப் பிரசுரிப்பதில்லை. அவை சிறுகதை , தொடர்கதை, கட்டுரை போன்றவற்றையே பிரசுரிக்கின்றன. வானொலிமட்டுமே நாடகக் கலையை ஆதரிக்கின்றது. ஒவ்வொரு வாரமும் நூற்றுக்கணக்கான சிறுகதைகள்பிரசுரிக்கப்படுகின்றன. தொடர்கதைகளும் மலிவு பொலிவாகப் பிரசுரமாகின்றன. ஆனால் அவை எல்லாவற்றையும் எல்லோரும் வாசிப்பதில்லை. வாசிப்பதற்கும் ஒரு முயற்சி தேவை. சிலவற்றைச் சிலர் வாசிப்பர். ஆனால் எவ்வித முயற்சியோ கஷ்டமோ இன்றி, கதிரையில் இருந்தபடியே வானொலி நாடகத்தை கேட்டு மகிழலாம்.

தமிழகத்து வானொலி நிலையங்கள் ஒலிபரப்புகின்ற தமிழ் நாடகங்களை இலங்கை நாடக ரசிகர்களும் கேட்கின்றனர். இலங்கை வானொலியைத் தமிழகத்தில் கேட்கக்கூடியதாக இருந்த காலத்தில் அவர்களது நாடகங்களை அவர்களும் கேட்டு ரசித்தனர்.

### இலங்கை வானொலி நாடகங்களின் சிறப்பு

இலங்கை வானொலி கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் நாடகங்களைத் தயாரித்து ஒலிபரப்பிவருகின்றது. அதன் பிராந்திய நிலையங்களும் அதன் நாடகங்களை ஒலிபரப்புகின்றன. இலங்கையில் உள்ள தனியார் வானொலி நிலையங்களும் நாடகங்களை ஒலிபரப்புகின்றன.

இன்று இலங்கை வானொலியின் தமிழ்ச்சேவையும் முஸ்லிம் சேவையும் ஒவ்வொரு வாரமும் புதுப்புது நாடகங்களை ஒலிபரப்புகின்றன. இலங்கையில் வேறு எந்த நிறுவனமும் இவ்வளவு தொகையான நாடகங்களைத் தமிழ் பேசும் மக்களுக்கு வழங்கவில்லை. இலங்கையர் இலங்கை வானொலி நாடகங்களையே விரும்பிக கேட்கின்றனர். அதற்குப்பல காரணங்கள்:

இலங்கை வானொலி நாடகங்கள் இந்த நாட்டு மக்களது வாழ்க்கையைச் சித்திரிப்பதே பிரதான காரணம். அவற்றில் வருகின்ற பாத்திரங்கள் எல்லாம் நாம் சாதாரணமாக சமூகத்தில் சந்தித்துப் பேசிப் பழகும் மனிதர்களே. அந்த நாடகங்களின் கதை, அவற்றில் வரும் வாழ்க்கை முறை, அப்பாத்திரங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் எல்லாம் இலங்கையருடையனவே! எனவேதான் இலங்கை மக்கள் அந்தப்பாத்திரங்களுடன் நன்றாக ஒன்றி நின்று, நாடகங்களை ரசிக்க முடிகிறது. சினிமா, கலைகள், சஞ்சிகைகள், நாவல்கள் என்று எல்லாவற்றிற்கும் தமிழகத்தை எதிர்பார்த்து நிற்கும் இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்கள், நாடகம் என்றதும் இலங்கை வானொலியைத் திருப்புவது, இலங்கை வானொலிக்கும் பெருமை, எங்களுக்கும் பெருமை!

தமிழ்ச் சேவையிலும் முஸ்லிம் சேவையிலும் ஒலிபரப்பப்பட்ட பல நாடகங்கள் நூல்களாகவும் வெளிவந்துள்ளன. நானே இதுவரை எனது 38 வானொலி நாடகங்களை அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றேன். அப்படி வெளியிடப்பட்ட பல நாடகங்கள் மேடைகளிலும் நடிக்கப்படுகின்றன.

தமிழ் நாடகத்துறை வளரவில்லையே என்று பலர் மூக்கால் அழுகின்றனர. இங்கே வானொலி நாடகத் துறை நன்றாக வளர்ந்துள்ளதே! கண்முன்னால் குவிந்து கிடக்கின்ற செல்வங்களைப் பாராது, எங்கேயோ பார்த்துக்கொண்டு அழுகிறார்கள்.

வானொலி நாடகம் தமிழ் பேசும் மக்களுக்கு சிறந்த, செலவில்லாத பொழுதுபோக்கு. அது எமக்கு மேலதிகமாக கலை இலக்கிய இன்பங்களுடன் நல்ல கருத்துக்களையும் தருகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ் நாடகத் துறையையும் வளர்க்கிறதே!

கலாபூஷணம்
அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை

### வானொலி நாடகத்தைக்-கற்பித்தல்

எங்கள் பாடசாலை மாணவர்களுக்கு வானொலி நாடகம் கற்பிக்கப்படுவதில்லை. மாணவர்கள் தமிழ் மொழியைக் கற்பதற்காக எழுதப்பட்ட பாடநூல்களில் வானொலி நாடகம் பற்றி ஒரு கட்டுரைகூட எழுதப்படவில்லை. அதை எழுதியவர்களுக்கு வானொலி நாடகம் தெரியாததினால், தெரியாவிட்டால் தெரிந்தவர்களிடம் கேட்டல்லவா பாட நூல்கள் எழுத வேண்டும்!

எங்கள் பல்கலைக்கழகங்களில் ''நாடகமும் அரங்கியலும்'' என்று ஒருபாடம் கற்பிக்கிறார்கள். அங்கேயும் மாணவர்களுக்கு வானொலி நாடகம் கற்பிப்பதில்லை. அதைக் கற்பித்தவர்களுக்கு வானொலி நாடகம் சரியாகத் தெரியாததினால் எனது நூல்களை வைத்தே அதைக் கற்பித்திருக்கலாம் அதற்காகத்தான் - வானொலி நாடகம் கற்பிக்கத் தொடங்கினால் எனது நூல்களையும் கற்பிக்க வேண்டி வந்துவிடுமே என்று தான் அதைக் கற்பிக்காமல் இருக்கிறார்களோ என்னவோ? குளத்தோடு கோபித்துக்கொண்டு கால்கழுவாமல் விட்டவன் மாதிரி இது என்ன கூத்து?

நாங்கள் தீக்கோழிகளாக கண்களை இறுக மூடிக்கொண்டு ''வானொலி நாடகம் என்று ஒன்றில்லை'' என்று கத்தலாம் ஆனால் உலகம் முழுவதிலும் நன்கு வளர்ந்திருப்பதும், இனி மேலும் வேகமாக வளரப்போவதும் வானொலி நாடகம் தான். தமிழிலும் அது நன்றாக வளர்ந்துள்ளது! அதை எங்கள் மாணவர்களுக்கு கட்டாயம்கற்பிக்க வேண்டும்! அப்பொழுது தான் அவர்களும் உலகத்துடன் சேர்ந்து முன்னேறுவார்கள். □

---

## சமய நிகழ்வுகள்

### கொடியேற்றம்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் கல்வளை விநாயகா ஆலய வருடாந்த உற்சவம் இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10தினங்கள் நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் தேர்,தீர்த்த உற்சவங்கள் முறையே எதிர்வரும் 12,13ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (உ-232)

### வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

அராலி வடக்குமயிலியற்புலம் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 5ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதி தேர்த் திருவிழாவும்,15ஆம் திகதி தீர்த்தோற்சவமும்,16ஆம்திகதி பூங்காவனமும் நடைபெறும். (பி15)

### ஆன்மீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

செல்லக்கதிர்காம மகோற்சவ கால ஆன்மீகத் தொடர் சொற்பொழிவில் இன்று வியாழக்கிழமை ''ஆறுமுகமான பொருள்'' எனும் தலைப்பில் வட்டு.மத்திய கல்லூரி ஆசிரியர் துணைவியூர் கேசவன் உரையாற்றவுள்ளார். (உ-10)

### திருக்கேதீஸ்வர கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

திருக்கேதீஸ்வர ஆலய மஹா கும்பாபிஷேக விழா எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை மு.ப 9மணிமுதல் மறுநாள் சனிக்கிழமை மு.ப.11 மணிவரை எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு இடம் பெறவுள்ளது. (உ-10)

### குருபூசை

(யாழ்ப்பாணம்)

மாணிக்கவாசகர் குருபூசை தினத்தையொட்டி நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00மணிக்கு நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயத்தில் பூசையைத் தொடர்ந்து மாணிக்கவாசகர் சுவமிகளுக்கு அபிஷேகம், பூசை வழிபாடு, திருவாசகப் பாராயணம் ஆகியன இடமபெறவுள்ளன.

அதேவேளை மாணிக்கவாசகர் குருபூசையை ஒட்டி மறை தேவார பாடசாலை, நல்லூர் ஸ்ரீகாமாட்சி அம்பாள் மடாலயம் ஆகியவற்றிலும் பூசை வழிபாடு, திருவாசகப் பாராயணம் ஆகியன நடைபெறவுள்ளன. (உ-15)

### இராஜகோபுரத்திற்கு அடிக்கல் நாட்டல்

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் சிவன் கோவிலில் 50லட்சம் ரூபாசெலவில் இராஜகோபுரமொன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இவ்இராஜகோபுரத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுளளது. இவ்வடிக்கல் நாட்டும்விழாவில் நல்லை குருமகா சந்நிதானம் பரமாச்சாரிய சுவாமிகள், லண்டன் வே.சிவசுந்தரம், இந்து கலாசார அலுவல்கள் அமைச்சு பணிப்பாளர் சிவமகாலிங்கம் கோப்பாய்ப் பிரதேச செயலர் எஸ் ஸ்ரீநிவாசன் உட்பட இன்னும் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (52)

### மாணிக்கவாசகர் குரு பூசை

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியின் இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை மாணிக்கவாசகர் குருபூசையும் திருவாசக விழாவும் கல்லூரி யில் அமைந்துள்ள சோமஸ்கந்த ஆலயத்தில்இந்து மன்றத்தலைவர் த.அம்... தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ''விழுப்பொரு...'' எனும் தலைப்பில் சி.கோபிகிருஷ்ணாவும், போக்குகின்றோம் அவமே இப்பூமி'' என்ற தலைப்பில் சைவப் புலவர் கந்தசத்தியதாசனும் சொற்பொழிவாற்றவுள்ளனர். (உ-8)

### வருடாந்த உற்சவம்

புலோலி தெற்கு புற்றளை சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 12-ம் திகதி சனிக்கிழமை தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது. (உ-35)

---

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட

## விவசாயக்காணிகளை புனரமைக்க 4 கோடி நிதி உதவி

(கொழும்பு)

அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவுகளினால் பாதிக்கப்பட்ட விவசாயக்காணிகளை புனரமைப்பதற்கு ஐக்கியநாடுகள் சபையின்கீழ் செயற்படும் உலக உணவுஸ்தாபனம் 4கோடிரூபாவை வழங்கமுன்வந்துள்ளதாக விவசாய ச்முர்த்தி விவகார அமைச்சின் செயலாளர் தனுசிறி கெட்டியராட்சி தெரிவித்துள்ளார்.

கடந்தமாதம் ஜெனிவாவில் நடைபெற்ற வெள்ளத்தால் பாதிப்புற்ற பிரதேசங்களை கட்டிஎழுப்பும் விசேட மாநாட்டில் இவ் உறுதிமொழி வழங்கப்பட்டது.

150க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்ட இம்மாநாட்டில் மேலும் பல நிதியுதவிகள் கிடைத்துள்ளன.

இதேவேளை, எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள விவசாய அமைச்சர்களின் சர்வதேச மாநாட்டில் மேலும் நிதி உதவிகள் கிடைக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

உதவிசுங்க அத்தியட்சகர் படுகொலைவழக்கின்

## மரணதண்டனைக் கைதிகள் உயர் நீதிமன்றில் முறையீடு

(கொழும்பு)

உதவிச்சுங்க அத்தியட்சகர் சுஜித்பிரசன்ன பெரேராவின் படுகொலை வழக்கில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட 3பேர் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு உயர்நீதி மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பிரதிவாதிகள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த இம் மனுவை,சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உயர் நீதிமன்றத்தில் ஒப்படைத் தனர்.

மூன்று பிரதிவாதிகளுக்கும் எதிராக சட்டமா அதிபர் தாக்கல் செய்தமனுவை விசாரித்த மூன்று மேல்நீதிமன்ற நீதியரசர்கள் கொண்டகுழு அவர்களுக்கு மரண தண்டனை தீர்ப்பளித்தது.

இத்தண்டனையை நீக்குமாறு கோரியே இம்மூவரும் மேன்முறையீடு செய்துள்ளனர். (தி)

# கேட்போர் கூடம் அமைக்க எம்.பிக்கள் உறுதிமொழி

(வவுனியா)

மூவாயிரம் மாணவர்கள் ஒரே நேரத்தில் அமரக்கூடிய கேட்போர் கூடமொன்றை வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்திற்கு அமைத்து கொடுப்பதற்கு வன்னி நாடாளு மன்ற உறுப்பினர்கள் உறுதி அளித் துள்ளனர்.

அதற்குரிய நிதியை வவுனியா வில் அமுலாக்கப்படும் ஒரு வெளி நாட்டுத் திட்டமூடாக பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக வும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான நூர்தீன் மசூர், ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந் தன், கே.ஆர்.குகனேஸ்வரன், றிசாட் பதியுதீன் ஆகியோர் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்படி பாட சாலை அபிவிருத்தி சங்கத்தின் அழைப்பின் பேரில் வித்தியாலத் திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இவர்களுடன் அகில இலங் கைத் தமிழ் காங்கிரஸ் வன்னி மாவட்டத் தலைவர் கே.ஏ.செந்தில் நாதனும் சென்றிருந்தார்.

இதேவேளை, இப்பாடசாலை யின் வடிகால் அமைப்பை சீர்ப் படுத்தவும் இவ்வருடம் நிதி ஒதுக் குவதாக நாடாளுமன்ற உறுப்பினர் கள் வாக்குறுதி அளித்தனர். (உ-13)

# பாதாள உலகக் கும்பல் தலைவர் பொலிஸில் சரண்

(கொழும்பு)

பிரபல பாதாள உலகக் குழுத் தலைவர்களில் ஒருவரான தம்மிக அமரசிங்காவினதும் அவரது குழு வைச் சேர்ந்த மேலும் இரு சந்தேக நபர்களும் பொலிஸில் சரணடைந் துள்ளனர். இவர்கள்மீது சுமத் தப்பட்ட 9 கிரிமினல் குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக சி.ஐ.டி. பொலிஸார் புலன்விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

பத்தேகண சஞ்சீவ கொலை, கடுவெல முக்கொலைகள், வெல் லம்பிட்டிய இரட்டைக் கொலைகள், ரோகணகுமாரின் கொலை, ராஜ கிரிய இரட்டைக் கொலை, கொள் ளுப்பிட்டி நிரஞ்சன் செல்லச்சாமி கொலை என்பன போன்ற கொலைக் குற்றச்சாட்டுக்கள் தம்மிக மீது சுமத்தப்பட்டிருந்தன. தம்மிகவை கைது செய்யும் உத்தரவு பிறப் பிக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த வியாழனன்று சட்டத்தரணி ஒருவர் ஊடாக நீதிமன்றத்தில் அவர் சரண டைந்துள்ளார். மற்றய இருவரிலும் கூட ஏராளமான கொலைக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள் ளன. சி.ஐ.டி. பணிப்பாளர் கெட்டி யாராய்ச்சி இது பற்றி தெரிவிக் கையில், தம்மிக முக்கிய தகவல் களை மறைத்து வைத்திருந்த தாலும் சி.ஐ.டி.யினர் தம்மீது நடவடிக்கை எடுப்பர்என்ற பயத்தின் காரணமாகவே அவர் தானாக முன் வந்து சரணடைந்துள்ளார் என்று கூறினார். (த)

# 'முகம்' நெறியாளர் அருந்ததி பல்கலையில் கருத்துரை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புற நிலைப் படிப்புக்கள் அலகின் ஏற் பாட்டில் பாரிசில் தயாரிக்கப்பட்ட புலம் பெயர்ந்தோர் வாழ்வைச் சித்தரிக்கும் அருந்ததியின் 'முகம்' எனும் தமிழ்த் திரைப்படம் எதிர் வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணிக்கு புவியி யற்றுறை மண்டபத்தில் காண்பிக் கப்படவுள்ளது.

படத்தின் இறுதியில் எழுத்தாளர் அ.யேசுராசா தலைமையில் இடம் பெறவுள்ள கலந்துரையாட்லில் மேற்படி படத்தின் நெறியாளர் அருந்ததி பங்குகொள்ளவுள்ளார்.

மேற்படி திரைப்படக் காட்சிக்கு ஆர்வலர்கள் எவரும் வருகைதந்து பயன்பெற முடியும் என புறநிலைப் படிப்புக்கள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ)

## தரம் 11 மாணவர்களுக்கான
## கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப் போட்டி

பரிசில்கள்:

1ஆம் பரிசு ரூபா 750/=
2ஆம் பரிசு ரூபா 500/=
3ஆம் பரிசு ரூபா 250/=

மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

ஈழத்து எழுத்தாளர்
அமரர் கணபதி கணேசன் ஞாபகார்த்தமாக
(செம்பருத்தி பப்ளிகேஷன்ஸ் மலேசியா)

கட்டுரையின் தலைப்பு
**கல்வித்துறையில் கணினியின் பங்கு**

போட்டியின் விதிகள்:

தரம் பதினொன்றில் இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட்டும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

* கட்டுரை 200தொடக்கம் 250சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.
* புஸ்காப் தாளில் ஒவ்வொரு தனிப்பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்.
* கட்டுரைகள் 25.07.2003க்கு முன்னதாக ''மாணவர் கட்டுரைப் போட்டி'' வலம்புரி, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

**இணைக்கும் பத்திரம்**
**கட்டுரைப்போட்டி இல-6**

மாணவர் பெயர்:
பாடசாலை முகவரி:
கற்கும் தரம்:

உறுதிப்படுத்துகிறேன்

ஆசிரியர்.

# செய்தித்துளிகள்

## சமயம் சார் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

அரியாலை வெட்டுக்குளம் அம் பாள் ஆலய வருடாந்த மஹோற் சவத்தை முன்னிட்டு அரியாலை கல்வி வளர்ச்சிக்கழக மாணவர்க ளிடையே சமயம் சார்ந்த போட்டி களை நடாத்தவுள்ளது.

இதன் பிரகாரம் இன்று வியாழக் கிழமை தரம் 3 முதல் தரம் 8 வரையான மாணவர்களுக்கான சமய அறிவுப் போட்டிகள் நடை பெறவுள்ளன.

தரம் 9 முதல் உயர்தரம் 2004 வரையான மாணவர்களுக்கான சமய அறிவுப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன.

மாலை கட்டுதல் போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமையும் கோலப் போட்டிகள் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெற வுள்ளன.

இப்போட்டிகள் யாவும் பி.ப. 3 மணி முதல் 4.30 மணி வரை ஆலய பிரதான மண்டபத்தில் நடைபெறுமெனவும், ஆர்வமுள்ள மாணவ மாணவியர் கலந்து கொள ளலாம் எனவும் அறிவிக்கப்பட டுள்ளது. (உ-8)

## வேம்படி மாணவிகள் முதலிடம்

(சுதுமலை)

யாழ். மாவட்ட மக்கள் நலன் புரிச் சங்கமும் படையணிகளும் இணைந்து நடத்திய மாணவிகளிற் கான தேசிய பாசறை நிகழ்வில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி 87 புள்ளிகளைப் பெற்று முதலி டத்தையும், 83 புள்ளிகளைப் பெற்ற வடமராட்சி மத்திய மகளிர் கல் லூரி இரண்டாமிடத்தையும், 78 புள்ளிகளைப் பெற்ற சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மூன்றாம் இடத் தையும், 71 புள்ளிகளைப் பெற்ற இணுவில் இந்துக் கல்லூரி நான் காம் இடத்தையும், 69 புள்ளி களைப் பெற்ற வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி ஐந்தாம் இடத் தையும் பெற்றுள்ளது.

இப்பாசறையில் யாழ். மாவட் டத்தைச் சேர்ந்த 33 பாடசாலைகள் கலந்து கொண்டமை குறிப்பிடத் தக்கது.

இப்பாசறை நிகழ்வில் பல்வேறு போட்டிகளில் அதி கூடிய புள்ளி களைப் பெற்று முதலிடத்தைப் பெற்ற பாடசாலைகளிற்கு பரிசில்க ளும் சான்றிதழ்களும் வழங்கப் பட்டன. (உ-252)

## சட்டமூலம் மீதான விவாதம்

(கொழும்பு)

இலங்கைக் கடற்பிராந்தியத்தில் பெற்றோல் வள ஆய்வுகளுக்கு உதவும் வகையிலான 'பெற்றோலிய வளங்கள் சட்டமூலம்' எதிர்வரும் 9ஆம் திகதி பாராளுமன்றில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளதென மின்சக்தி எரி பொருள் அமைச்சர் கரு ஜெய சூரிய தெரிவித்துள்ளார்.

இத்தகையதொரு சட்டமூலம் நிறைவேற்றப்படுவதன் மூலம் பன்நாட்டு நிறுவனங்களின் உதவி யுடன் இலங்கைக் கடல்வலயத்தில் பெற்றோலிய வள ஆய்வுகளை மேற்கொள்ள முடியும் என அமைச் சர் மேலும் நம்பிக்கை தெரிவித் துள்ளார். (உ-10)

## கொழும்பு-அம்பாறை விமானச் சேவை ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்பு-அம்பாறை விமான சேவை இம்மாத நடுப்பகுதியில் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள சமா தானச் சூழ்நிலையை தொடர்ந்து தினமும் ஒரு தடவை இச்சேவையை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன், வெளிநாட்டு முதலீட் டாளர்கள் வர்த்தக நடவடிக்கை களை விரிவுபடுத்தும் நோக்குடன் அம்பாறை மாவட்டத்தில் முதலீடு களை செய்ய முன்வந்துள்ளனர்,

இக்காரணங்களின் அடிப்படை யிலேயே அம்பாறை மாவட்டத்துக் கான விமான சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது. (தி)

## விழாக்கால வங்கிச்சேவை

(மண்டைதீவு)

நயினைத் திருவிழாவையொட்டி மக்கள் வங்கியின் ஊர்காவற்றுறை பிரிவு விழாக்கால வங்கிச் சேவையை நயினை நாகபூசணி அம்மன் ஆல யத்தில் நடாத்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. வரும் 11, 12, 13 ஆகிய திகதிகளில் இவ் வங்கிச்சேவை இடம்பெறவுள்ளது. இத்தினங்களில் புதிய கணக்குகளை ஆரம்பித்தல் மற்றும் கணக்குகளில் வைப்புச் செய்தல் ஆகியன இடம்பெறும். (பி-11)

## கொழும்பு-மட்டு ரயில்சேவை ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்பு-மட்டக்களப்பு நேரடி ரயில் சேவை நேற்று முன்தினம் முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட் டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து முதலாவது ரயில்சேவை ஆரம்பித்துவைக்கப் பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி வாழைச்சேனையில் இருந்து மட்டக்களப்புக்கான ரயில்சேவை ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இரு தடவைகள் ரயில் தடம் புரண்ட தால் இச் சேவைகள் இடை நிறுத் தப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (தி)

## குழந்தைகள் விளையாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

அட்வென்டிஸ்ட் சர்வதேச முன் பள்ளி அமைப்பின் குழந்தைகள் விளையாட்டு விழா யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள 850 இலக்க இல்லத்தில் இன்று பி.ப. 3மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பாஸ்டர் ஜோர்ஜ் வம்பீக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ்ப் பாணப் பிரதேச செயலர் செந்தில் நந்தனன் பங்கேற்கவுள்ளார். (பி)

## வீதிச் சோதனை ஆரம்பம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அம்பலாற்றுறை யில் இராணுவத்தினர் நேற்று முன்தினம் முதல் சோதனை நட வடிக்கைகளை மீள ஆரம்பித் துள்ளனர்.

வீதிகளில் போக்குவரத்துச் செய்யும் அனைத்து வாகனங்க ளும் மறிக்கப்பட்டு சோதனையிடப் படுவதுடன், பயணிகளின் பயணப் பொதியும் சோதனையிடப்பட்டு வருகின்றது. (த-14)

## கணபதிப்பிள்ளை நினைவுநாள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை யின் நூற்றாண்டு நினைவு நாள் கருத்தரங்கு இன்று வியாழக் கிழமை பி.ப. 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை யரங்கில் பேராசிரியர் அ.சண்முக தாஸ் தலைமையில் இடம்பெற வுள்ளது.

இந்நிகழ்வில் நினைவுநாள் வாழ்த்துக்களை யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் எஸ்.மோகன தாஸ், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கலைப்பீடாதிபதி பேரா சிரியர் ப.கோபாலகிருஸ்ண ஐயர் ஆகியோரும், கருத்துரைகளை கலாநிதி க.சொக்கலிங்கம், கலாநிதி க.குணராஜா, கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் மற்றும் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (உ-8)

## மக்கள் கடை திறப்பு

(தனங்கிளப்பு)

தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ சங்கத்தின் புதிய மக்கள் கடை சங்க கட்டடத்தில் திறந்து வைக் கப்பட்டுள்ளதாக தலைவர் சி.சுப்பிர மணியம் தெரிவித்தார். (உ-37)

## 'ஆரியத்துள் நான்' வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இராஜேஸ்வரி கொன்ஸ்ரன் ரைன் ''ஆரியத்துள் நான்'' நூல் வெளியீடு எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30க்கு யாழ். பல்கலைக்கழக தமிழ்துறை கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் திருமறைக் கலா மன்ற கலைத்தூது மணிமண்டபத் தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் நூல் வெளியீட்டு ரையை செம்பியின் செல்வனும், நூல் நயப்புரையை யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் ஜி.பிலேந்தி ரனும் ஆற்றவுள்ளனர். (உ-15)

## கணபதிப்பிள்ளை பிறந்ததின விழா

(யாழ்ப்பாணம்)

இலக்கிய கலாநிதி பண்டித மணி சி.கணபதிப்பிள்ளையின் 104வது பிறந்த தின விழா எதிர் வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மு.ப. 9.30க்கு ஆசிரிய மணி அ.பஞ்சாட்சரம் தலைமையில் யாழ். வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெற வுள்ளது. (உ-15)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தீவக கல்வி வலயத்தில் உள்ள வேலணை மேற்கு நடராசா மகா வித்தியாலயத்திற்கு அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரப் பட்டுள்ளது. தகுதியானவர்கள் விண் ணப்பங்களை 15.07.2003ஆம் திக திக்கு முன்னர் தீவக கல்வி வலயத்திற்கு அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.வேணுகோபால் கேட்டுள்ளார். (உ)

## ஐ.தே.க. நிறைவேற்றுக் குழுக் கூட்டம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் நாளை யும் நாளை மறுதினமும் இரத்தின புரியில் நடைபெறவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-10)

## உரும்பிராய் பாடசாலைக்கு நிதி ஒதுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.ஜி.கஜேந்திரகுமார் உரும்பிராய் கிழக்கு சென். மைக்கல் சன சமூக நிலையம் மற்றும் உரும்பிராய் கிழக்கு றோ.க.த.க பாடசாலை என்பவற் றுக்கு நேரில் சென்று பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து அவற்றின் அபி விருத்திக்காக முறையே 50 ஆயிரம், ஒரு லட்சம் ரூபாவை ஒதுக்கி யுள்ளார். (உ)

## கூட்டம்

(தனங்கிளப்பு)

கொக்குவில் கிழக்கு ஸ்ரீ இராம கிருஷ்ண வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம் எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடை பெறவுள்ளது. (உ-37)

## மகளிர் அமைப்பு

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள போக்கறுப்பு கிராம அலுவலர் பிரிவில் மகளிர் அமைப்பு கடந்த செவ்வாய்க்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக் கப்பட்டது.

கிராம அலுவலர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைப் பின் தலைவராக ச.அமுதினியும், செயலாளராக கு.சந்திராதேவியும் தெரிவு செய்யப்பட்டனர்.

10 பேர் கொண்ட நிர்வாகசபை யும் தெரிவு செய்யப்பட்டது. (உ-35)

நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார் சொல் ஒல்லை உணரப்படும்.
—குறள்

வலம்புரி

## நீதிமன்றத் தீர்ப்பு

பிந்துனுவெவ படுகொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஐந்து எதிரிகளுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மரணதண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளமை,இலங்கையின் நீதி பரிபாலனத்தில், ஓர் முக்கிய திருப்பு முனையாகும். பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகளில் இருபத்தேழு பேர் படுகொலை செய்யப்பட்ட சோகமான சம்பவம் இந்நாட்டில்,அரச காவலர்களே தமிழ் மக்களைப் பலியெடுப்பதில் பெரும் பங்குவகித்தனர் என்பதை உலகுக்கு உறுதிப்படுத்தியது.

புனர்வாழ்வு அளிப்பதாகக் கூறி,முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகளைத் திட்டமிட்டுப் படுகொலை செய்வதில் அரச காவலாளர்கள் உடந்தையாக இருந்தனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணைகள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று, குற்றவாளிகளாகக் காணப்பட்ட இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட ஐவருக்கு மரணதண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

ஒரு காலத்தில் தமிழ் மக்களைக் கொலை செய்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும், படையினருக்கும் பதவி உயர்வுகளே வழங்கப்பட்டன.தமிழர்களைக் கொலை செய்கின்ற சிங்களவர்கள் தேசத்தின் தியாகிகளாகவும், பௌத்தமதக் காவலர்களாகவும் போற்றப்பட்டனர்.

ஆனால் இன்று அந்நிலைமை இல்லை என்பதை மேல் நீதி மன்றத்தின் தீர்ப்பு உறுதிப்படுத்தியுள்ளது.

இத்தகைய தீர்ப்புகள் 1983 ஜூலைக் கலவரத்தின் சூத்திரதாரிகளுக்கும் வழங்கப்பட்டிருக்குமாக இருந்தால், கடந்த 20 வருடங்களாக ஏற்பட்ட இனப் படுகொலைகளைத் தடுத்திருக்க முடியும்.காலத்திற்குக் காலம் சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்களைக் கொன்றொழித்து, அவர்களின் சொத்துக்களை சூறையாடிய போதெல்லாம் நீதி பரிபாலனம் மௌனமாக இருந்தது. நாட்டில் சட்டத்தையும், நீதியையும் காக்க வேண்டியவர்களே இனக் கலவரத்துக்கும், வன்செயல்களுக்கும் தூபமிடுபவர்களாக இருந்தனர்.

இதன் காரணமாகவே இலங்கையின் இனப்பிரச்சினை நீண்டு வந்துள்ளது.இத்தகைய நிலைமைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் நீதிபரிபாலனம் தற்போது விழித்துக் கொண்டது.அதன் ஒரு அறிகுறியாகவே பிந்துனுவெவ படுகொலையின் சூத்திரதாரிகளான ஐவருக்கு மேல் நீதி மன்றம் மரணதண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளது.

அது மட்டுமன்றி பிந்துனுவெவ படுகொலைகளுக்கான முழுப் பொறுப்பும் பொலிஸாரையே சாரும் என்ற தீர்ப்பையும் மேல் நீதி மன்ற நீதிபதிகள் தமது தீர்ப்பில் ஏகமனதாகக் குறிப்பிட்டிருப்பது இனிமேலாவது இலங்கைப் பொலிஸார் இனபேதம் இன்றி சட்டத்தைப் பாதுகாக்க வழிவகுப்பதாக அமையும்.

எதுவாயினும் ஒரு நாட்டில் நீதிமன்றங்களும்,பாதுகாப்புத் துறையும் விழிப்போடு செயற்பட்டால் அந்நாட்டில் அக்கிரமங்களுக்கும்,அநியாயங்களுக்கும் இடம் இருக்காதென்பது உறுதி.

## வெள்ளப்பாதிப்புகளுக்கென
## ஜனாதிபதி நிதியத்தில் இருந்து இது வரை 224 மில்லியன் நிதி

(கொழும்பு)

தென்னிங்கையில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண் சரிவுகளுக்கென ஜனாதிபதி நிதியத்திலிருந்து இதுவரை 224 மில்லியன் ரூபா நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீடுகள் அமைப்பதற்கென ஜனாதிபதி 205 மில்லியன் ரூபாவை கடந்த திங்கட்கிழமை காசோலையாக வழங்கியுள்ளார்.

தெற்கு மேற்கு சப்பிரகமுவ மாகாண முதலமைச்சர்கள் மற்றும் ஆளுநர்கள் முன்னிலையில் காசோலை வழங்கப்பட்டுள்ளது. இந்நிதியின் கீழ், முழுமையாக பாதிக்கப்பட்ட 8 ஆயிரத்து 653 குடும்பங்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாவும், வீட்டின் ஒருபகுதி பாதிப்புக்குள்ளான 23 ஆயிரத்து 533 குடும்பங்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபாவீதம் நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

இதேவேளை தெற்கு சப்பிரகமுவப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட பாடசலைகளைப் புனரமைப்பதற்கென ஏற்கனவே 19 மில்லியன் ரூபா நிதி ஜனாதிபதியால் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

## ப.நோ.கூ. சங்கக் கிளை திறப்பு

(தனங்கிளப்பு)

தனங்கிளப்பு, மறவன்புலோ, சாவகச்சேரி, நுணாவில், மட்டுவில், கொடிகாமம் வடமராட்சி ஆகிய பகுதிகளில் வாழும் மக்கள் நிவாரணம் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக தென்மராட்சி மேற்கு கைதடி ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் கிளை ஒன்று நேற்று முன்தினம் சாவகச்சேரி பழைய பொலிஸ் நிலைய வீதியில் தனியார் வீடொன்றில் திறந்து வைக்கப்பட்டது. (உ-37)

## சுகாதார சேவையிலுள்ள
## மூவாயிரம் சிற்றூழியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க சுகாதார சேவையில் தற்காலிகமாக கடமையாற்றும் மூவாயிரம் சிற்றூழியர்கள் அவர்களது பதவியில் விரைவில் நிரந்தரமாக நியமிக்கப்படுவார்கள் என்று சுகாதார போஷாக்கு நலன்புரித்துறை அமைச்சர் பி. தயாரட்ண தெரிவித்துள்ளார்.

பொது நிர்வாக நிறுவனங்கள் துறைப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றதும் இவர்கள் தங்கள் பதவிகளில் நிரந்தரமாக்கப்படுவார்கள்.

இலங்கை குடியரசு சுகாதார சேவைகள் சங்கப் பிரதிநிதிகள் விடுத்த வேண்டுகோளின் நிமித்தம் மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது அரசாங்க வைத்திய சாலைகளில் கடமை புரியும் சிற்றூழியர்களுக்கு வருடாந்தம் சீருடைத் துணி வழங்கப்பட்டு வருகின்றது. எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் இவர்களுக்கு சீருடைக்கான கொடுப்பனவு வழங்கப்படும். புதிய திட்டப்படி ஆண் சிற்றூழியர்களுக்கு ஆயிரத்து 600 ரூபாவும் பெண் சிற்றூழியர்களுக்கு ஆயிரத்து 700 ரூபாவும் வழங்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (உ-15)

## பாவனைக்கு ஏற்றதல்லாத தளபாடங்களால் பாதிப்பு

(பருத்தித்துறை)

உலக வங்கியின் உதவியுடன் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் பாடசாலை நூலகங்களுக்கு வழங்கப்பட்ட நூலக தளபாடங்கள் சில பாவனைக்கு ஏற்றதாக இல்லை எனப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாவனைக்கு ஏற்றதல்லாத இத் தளபாடங்கள் நூலக அபிவிருத்திக்குப் பெரும் இடைஞ்சலை விழைவிப்பதாக சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கங்கள் கல்வி அமைச்சுக்குப் புகார் செய்துள்ளதோடு பாவனைக்கு ஏற்ற தளபாடஙகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுள்ளன.(உ-52)

## அரசியல் கைதிகளின் வழக்குகளை துரிதப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் அவசரகால சட்டங்களின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள வர்களின வழக்குகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மேல்நீதிமன்ற நீதியரசர் சுனில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் அமைக்கப்பட்டுள்ள விசேட நீதிமன்றத்தில் இவ்வழக்குகள் யாவும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை மேற்படி சட்டங்களில் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களில் போதிய சாட்சியங்கள் இல்லாத பல வழக்குகளை சட்டமா அதிபர் வாபஸ் பெற்றுள்ளார். இவ்ற்றினை விட மேலதிக மாகவுள்ள 60 வழக்குகளை விசாரணை செய்து தீர்ப்பு வழங்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(தி)

## கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையம் கால் நடை அபிவிருத்திச் சங்கம் வசம்

(கொழும்பு)

இதுவரை காலமும் அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் யாழ். மாவட்ட கிராமிய கூட்டுறவு வங்கியின் சமாசத்தினால் நடத்தப்பட்டு வந்த கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையம் நேற்று முதல் கால்நடைகள் அபிவிருத்தித்திணைக்களத்திடம் உத்தியோக பூர்வமாககையளிக்கப்படுகிறது.

கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் கால்நடைகளஅபிவிருத்தித் திணைக்களத்தின் பொறுப்பதிகாரியான டாக்டர் இராமநாதனிடம் இப்பொறுப்பைக் கையளிப்பார்.

அதைத் தொடர்ந்து இவ்வுற்பத்தி நிலையத்தினை கால்நடைகள் அபிவிருத்தித் திணைக்களம் யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திடம் கையளிக்கும் எனத் தெரியவருகிறது.

கடந்த இரண்டு வருடங்களாக அச்சுவேலியில் இயங்கிவந்த கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்துக்கான நிதியினை யு.என்.டி.பி. நிறுவனம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.(உ-77)

## கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 48வது ஆண்டு நிறைவை முன்னிட்டு கைதடி தெற்கு மின்னொளி விளையாட்டுக் கழகம் நடத்தும் மென்பந்து கிறிக்கெட் போட்டி இன்று பிற்பகல் 3மணிக்கு நடைபெறவுள்ளது.

இன்றைய போட்டியில் கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (த-5)

## இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படும்
## சைப்பிரஸில் டிரோன் விளக்கம்

(கொழும்பு)

இருபது வருட கால இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கை ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு உண்டென வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

சைப்பிரஸ் ஜனாதிபதியை அண்மையில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் இச் சந்திப்பின் போது இலங்கையின் தற்போதைய சமாதானப் பேச்சு வார்த்தைகளின் முன்னேற்றம் மற்றும் தற்காலிக இடைநிறுத்தம் குறித்து அந்நாட்டு ஜனாதிபதி மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருக்கு விளக்கியுள்ளதுடன் அண்மையில் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டம் குறித்தும் அம் மாநாட்டின் மூலம் கிடைத்த நிதி உதவிகளின் அபிவிருத்திக் திட்டங்கள் குறித்தும் விளக்கமளித்துள்ளார்.

இதேவேளை சைப்பிரஸ்-இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையிலான சுதந்திர வர்த்தக நடவடிக்கைகளின் போது இரட்டை வரியை தவிர்த்துக் கொள்வது தொடர்பாகவும் இங்கு ஆராயப்பட்டுள்ளது என அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

## வயோதிபர்களுக்கு தனியான சாரதி அனுமதிப் பத்திரம்

(கொழும்பு)

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் புதிய சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

அதிகரித்து வரும் வீதி விபத்துக்களை கட்டுப்படுத்தும் நோக்குடனேயே இத்திட்டம் அமுல்படுத்தப்படுகிறது என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

60வயதுக்கு மேற்பட்ட சில சாரதிகள் மிகப்பழைய அனுமதிப் பத்திரத்தை பாவித்து,மிக மோசமான நிலையில் வாகனங்களை செலுத்துவதனால் வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன.

இப்புதிய சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் போது,விண்ணப்பதாரர்கள் அனைவரும் மருத்துவ பரிசோதனைக்குட்படுத்துவதுடன், பொருத்தமானவர்களுக்கு மட்டுமே புதிய அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

அத்துடன் 1980-ம் ஆண்டிற்கு முன்னர் வழங்கப்பட்ட சகல அனுமதிப்பத்திரங்களும் புதிப்பிக்கப்பட வேண்டும்.

ஒரு சாரதி தொடந்து மூன்று விபத்துக்களில் சம்பந்தபட்டிருந்தால் அவரது சாரதி அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)



## சாயி அருளமுதம்

பத்தனுடைய நமஸ்காரம் அவனுடைய உளநிலை அவனுடைய வளர்ச்சியின் பரிணாமம் ஆகியவற்றிற்கேற்ப அமையும் பத்தியானது பலவிதப்படும். பீஷ்மரின் சாந்திபத்தி யசோதையில் வாத்தல்ய பத்தி கோபிகைகளின் மதுரபத்தி யென பலவகையான பத்தி முறைகள் உண்டு. இவற்றில் அனேகமான சாதகர்களுக்கு தற்காலத்தில் சுலபமானதும் சிறந்ததுமானதுமாகக் கருதப்படுவது தாசபாவமாகும் அதன் பொருள் சாந்த பக்தியிலிருந்து சரணாகதியும் பிரபாதிதியும் பெறுதல் என்பதாகும்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

## ஆயிரம் கிலோ கடலுணவு கொழும்பிற்கு ஏற்றுமதி

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டு மீனவர்களின் கடல் உணவு உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் ஆயிரம் கிலோ கிறாம் எடையுள்ள இறால்,நண்டுகள் நேற்று முன்தினம் கொழும்பிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

சாவல்காடு மற்றும் குருநகர் பகுதி மீனவர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட இக்கடலுணவு வகைகளை யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கொழும்பிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றுடன் இணைந்தே இவ் ஏற்றுமதியைச் செய்துள்ளது.

நேற்று முன்தினம் கொண்டு செல்லப்பட்ட கடலுணவு வகைகள் அதிகளவில் விற்பனையாகும் பட்சத்தில் யாழ்.குடாநாட்டில் உள்ள சகல மீனவர்களிடமிருந்து கடலுணவு கொள்வனவு செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-8)



யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் 3-வது ஆண்டு நிறைவு நிகழ்வையொட்டி நேற்று நடைபெற்ற நினைவுப் பேருரையில் யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட தமிழ்த் துறை விரிவுரையாளர் கலாநிதி கி.விசாகரூபன் உரையாற்றுவதையும், கல்லூரிப் பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் மேடையில் அமர்ந்திருப்பதையும்,நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். படம்:-வளவன்.

# புலனாய்வு அதிகாரி கொலை புலிகளுக்கு தொடர்பில்லை

## சு.ப.தமிழ்ச்செல்வன் மறுப்பு

(கொழும்பு)

தெஹிவளைப் பொலிஸ் நிலையக் குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி சுனில்தாபுருவின் கொலைக்கும் தமது இயக்கத்திற்குமஎந்தவித தொடர்பும் இல்லை என விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் கூறியுள்ளார்.

தனியார் செய்தி நிறுவனம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எமது இயக்கதிற்கு களங்கம் ஏற்படுத்தும் வகையிலேயே இது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திட்டமிட்டு இக்கொலைகளை மேற்கொண்ட பின்பு அக்கொலைச் சந்தேக நபர்களாக விடுதலைப் புலிகளைக் கூறுவது மிகவும் கண்டிக்கத்தக்கது. என்றும் இவ்வாறான குற்றச்சாட்டுக்களை தெரிவிப்பதன் மூலம் தமிழ் மக்களின் மீது கெடுபிடிகளை மேற்கொள்ள பொலிஸார் முயன்று வருவதாகவும் சு.ப. தமிழ்ச் செல்வன் குற்றஞ்சாட்டியுள்ளார். (ந-5)

## அமெரிக்கக் குழு ஜனாதிபதி சந்திப்பு

(கொழும்பு)

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையில் வர்த்தக முதலீடுகளை அதிகரிக்கும் நேர்க்கில் பேச்சுககளை நடத்தவந்த அமெரிக்க தூதுக் குழு ஜனாதிபதியை அவரது வாசஸ்தலத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இச் சந்திப்பில் ஜனாதிபதியின் ஆலோசகர் கதிர்காமரும் பங்குபற்றி இருந்தார். (த)

### பொதுமக்கள்...

யென்றும் கூறினார்.

இதேவேளை படைத்தளபதியின் கருத்துக்கு பதிலளித்துப் பேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி நாட்டில் அவசரகாலச் சட்டங்கள் நீக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தை செயற்படுத்த முடியாதென்றும் உயர் பாதுகாப்பு வலயத்தில் பொதுமக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக படைத்தளபதி விரைவாக பதிலளிக்க வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ)

# உடத்தலவின்ன விசாரணையில் கண்டி மரணவிசாரணை அதிகாரி நேற்று சாட்சியம்

(கொழும்பு)

கடந்த பொதுத்தேர்தல் காலத்தில் உடத்தலவின்னவில் கொலை செய்யப்பட்ட 10 முஸ்லிம் இளைஞர்களின் மரண விசாரணைகளை மேற்கொண்ட கண்டி வைத்திய அதிகாரி அசோகித பண்டார கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று சாட்சியமளித்தார்.

நீதிமன்றில் அவர் சாட்சியமளிக்கையில், தெல்தெனிய நீதிவானின் உத்தரவுக்கு அமையவே மேற்படி 10 இளைஞர்களினதும் சடலத்தை, தான் மரணவிசாரணையை நடத்தியதாகவும் உயிரிழந்தவர்களில் பைவர் என்னும் இளைஞனின் சடலம் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டதையடுத்து தான் மரண விசாரணை நடத்தியதாகவும் மேற்படி இளைஞனின் சடலத்தில் 5 துப்பாக்கி சூட்டுக்காயங்கள் இருபதை, தான் உறுதி செய்ததாகவும் பிரதான சட்ட வைத்திய அதிகாரி நேற்று நீதிமன்றில் சாட்சியமளித்தார். (தி)

## ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஊடகவியலாளர்கள் ஒன்றிணைந்து கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.ஊடகவியலாளர் பொத்தல ஜெயந்தாவிற்கும் அவரது குடும்பத்தினருக்கும் விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் லேக்கவுசுக்கு முன்னால் இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றுள்ளது.

சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பு,இலங்கைத் தொழில்சார் ஊடகவியலாளர் சங்கம்,ஊடக ஊழியர் தொழிற் சங்கச் சம்மேளனம் ஆகியன ஒன்றிணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

இக்கொலை அச்சுறுத்தல்களை விடுததவர்களை உடனடியாக இனம் கண்டு விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ந-5)

### கொழும்பின்...

ள்ளது. இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசிய பிரதிப் பொலிஸ் மா அதிபர் போதிலியனகே, இதன் மூலம் பொலிஸார் மீது பொது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை மேலும் வலுவூட்ட முடியும் என தெரிவித்தார். இவ்வாறான திட்டங்கள் வெளிநாடுகளில் அமுல் படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (த)

### ஈ.பி.டி.பி...

நிலையில் வவுனியா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் குறித்து ஈ.பி.டி.பியினரால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து பொலிஸார் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினரும் அப்பகுதிக்குச் சென்று சம்பவம் பற்றிக் கேட்டறிந்துகொண்டனர்.

இதேவேளை விடுதலைப்புலி உறுப்பினர்களே தாம் விநியோகித்த துண்டுப் பிரசுரங்களை பறித்தெடுத்து எரித்ததாகவும் தமது உறுப்பினர்களைத் தாக்கியதாகவும் ஈ.பி.டி.பியினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஆனால் இக் குற்றச்சாட்டை விடுதலைப்புலிகள் மறுத்துள்ளனர். (த-13)

# வடமராட்சி கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்குக் கடற்பரப்பில் நூற்றுக்கணக்கான மீன்பிடி றோலர்களில் இந்திய மீனவர்கள் அத்துமீறி கடற்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் வடமராட்சிப் பகுதி மீனவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

நேற்று முன்தினம் இவ்வாறு நூற்றுக்கணக்கான இந்திய மீனவர்கள் மீன்பிடி றோலர்களில் வடமராட்சிக் கடற்பரப்பில் அத்துமீறி கடற்தொழில்ல் ஈடுபட்டதனால் வடமராட்சி பகுதிமீனவர்களின் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் சேதமடைந்துள்ளன.

வடமராட்சி சுப்பர் மடம், இன்பருட்டி சக்கோட்டை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 5 மீனவர்கள் இதனால் பாதிப்படைந்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாகக் கருத்து தெரிவித்த வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசச் செயலாளர் எஸ்.சூரியகுமார் கடந்த இரண்டு மாதங்களாக இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் இல்லாதிருந்தது. தற்போது ஒருசில தினங்களாக மீண்டும் அத்து மீறல்கள் ஆரமபித்துள்ளன. கடற்படையினரும இதுவிடயத்தில் அலட்சியமாக இருந்து வருகின்றனர். இந்த நிலை தொடருமானால் விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பளிப்பதாகிவிடும் என்றார். (த-4)

## முன்னாள் புலனாய்வு உறுப்பினரை காணவில்லை

(மட்டக்களப்பு)

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் உறுப்பினர் ஒருவரைக் கடந்த மாதம் 23-ம் திகதியிலிருந்து காணவில்லை என்று மட்டக்களப்பு மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

1992-ம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து விலகி,2000-ம் ஆண்டு வரை இராணுவ புலனாய்வுப் பிரிவில் பணியாற்றிய வீச்சுகல்முனையைச் சேர்ந்த வி.புண்ணியமூர்த்தி என்பவரே இவ்வாறு காணாமல் போனவராவார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னா சவுதிஅரேபியாவுக்குச் சென்ற இவர்,அண்மையிலேயே மட்டக்களப்புக்குத் திரும்பியிருந்ததாகக் கூறப்படுகிறது. (த)

### நோர்வேத்...

விக்கிரமசிங்காவை சந்திக்கவிருக்கும் தூதுவர் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வகை செய்யும், அரசின் இடைக்கால நிர்வாக சபை தொடர்பான திட்ட வரைபின் இறுதி வடிவம் குறித்தும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் அட்டவணை குறித்தும் விரிவாகப் பேசுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனையடுத்து அரசாங்கத்தின் உததேச இடைக்கால நிர்வாக சபை தொடர்பான திட்டவரைபுகளை எடுத்துக் கொண்டு அடுத்த வாரம் வன்னி செல்லும் தூதுவர் வெஸ்பேர்க், அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் அதனைக் கையளிப்பார் என கொழும்புத் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.(இ)

### இடைக்கால...

அதற்கு ஏற்றவாறு இனப்பிரச்சினைக்கு நிரந்திரத் தீர்வைக் காண தமிழ் மக்களும் அரசாங்கமும் முன்வரவேண்டும்.

நாட்டின் அரசியல் சாசனத்துக்கு அமைவாகவும் பாராளுமன்ற அங்கீகாரத்துடனும் சகல இன மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் இடைக்கால நிர்வாக சபை உருவாக்கப்பட்டால் அதனை அனைவரும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

சில அரசியல் கட்சிகளும், இனவாத அமைப்புக்களும் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிக்கு இடையூறாக செயற்பட்டு வருகின்றன. இவை தவிர்க்கப்பட வேண்டுமென்றும் அஸ்கிரிய பீடாதிபதி மேலும் கூறினார். (இ)


## வட இலங்கையில் முதன் முதலாக சீவல் ஐஸ் (FLAKE ICE) அறிமுகம்

மீன், இறால் போன்ற கடல் உணவுகளை சர்வதேச தரத்துக்கு ஏற்ற முறையில் குளிர் பதனிட மேற்கத்தேய நாடுகளில் பாவிக்கப்படும் சீவல் ஐஸ் இப்போது யாழ் நகரில் எம்மால் உற்பத்தி செய்து வழங்கப்படுகிறது.

### சிறப்பு நன்மைகள்

அ) சீவல் ஐஸ் உருவத்திலேயே சீவல் வடிவில் தயாரிக்கப்படுவதால் மிக நீண்ட நேரம் உருகாத தன்மை பெற்றுள்ளது.

ஆ) சீவல் ஐஸ் கூரிய முனைகளற்றதால் மீன், இறால், கணவாய் போன்ற கடலுணவுகளின் மென்மையான மேற்பரப்புகளை குத்தி சேதப்படுத்தாது அவற்றின் உயிரியல் நிலையிலேயே பேணும் வல்லமை உள்ளது.

இ) சீவல் ஐஸ் சீரான வடிவுள்ளதால் கடலுணவுகளை குளிர் பதனிடும்போது அவற்றின் கூடிய மேற்பரப்பில் அது பரந்து வியாபித்திருந்து கடலுணவுகளை சர்வதேச தரத்திற்கு ஏற்ப குளிரூட்டி நீண்ட நேரம் பாதுகாக்கின்றது.

ஈ) கடலுணவுகளின் மென்மையான மேற்பரப்பு சேதமடையாமல் பேணப்படுவதால் ஏற்றுமதி சந்தையில் சீவல் ஐஸ் பாவித்து குளிரூட்டிய கடல் உணவுகளிற்கு அதிகூடிய விலை கிடைப்பதன் மூலம் கூடிய இலாபம் ஈட்டலாம்.

உ) பழைமை முறைப்படி ஐஸ்கட்டிகளை உடைத்து பாவிப்பதை விட சீவல் ஐஸ் பாவிப்பதன் மூலம் ஐஸ் செலவினத்தை 20%தொடக்கம் 25 % வீதத்தால் குறைக்கலாம்.

**புறோமோட்டர்ஸ் எஞ்சினியரிங் கம்பனி லிமிடெட்**

தலைமை அலுவலகம்
844,பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தொ.இல.222-5780.

பனிக்கட்டி ஆலை
651/2, கடற்கரை வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்

(C/6376)



## ஆட்கள் தேவை

**கணனி பக்க வடிவமைப்பாளர்கள்**

(ஆண்கள் பெண்கள்)

**பத்திரிகை விநியோகஸ்தர்கள்**

(சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள்)

04.07.2003 நாளை வெள்ளிக்கிழமை,பிற்பகல் 3.30மணிக்கு நேரில் வரவும்.

-ஆளணி முகாமையாளர்.

-வலம்புரி-
இல.15 வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தர்பனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.07.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.